மேழிச்செல்வம்

மாத இதழ்



சோபகிருது௵ ஆவணி௴

MADRAS RECORD OFFICE
7 - SEP 1963
MADRAS
P. 822



விதையை கிராம சகாயக்கிடமே வாங்குங்கள்

விலை 25 நயா பைசா
வருட சந்தா ரூ. 3

[1963-ம் ௵ ஆகஸ்டு-செப்டம்பர் ௴



உலக சுகாதார தின விழா

சென்னை மருத்துவக் கல்லூரியில் 27–7–63 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

மேல்படம் : மேன்மை தங்கிய கவர்னர் திரு. விஷ்ணுராம்மேதி விவசாயத் துறையினர் கண்காட்சியில் வைத்திருந்த காய்கறிகளை பாராட்டுதல்.

கீழ்படம் : தொட்டியில் வளர்க்கப்பட்டிருக்கும் புடலையை கவர்னர் பார்த்து மகிழ்தல்.

(விபரத்திற்கு 7-ம் பக்கம் பார்க்கவும்)



உள்ளுறை

	பக்கம்.
"விந்த தின விழா"	5
தஞ்சையில் உணவு உற்பத்தியும் அதனைப் பெருக்கும் வழிகளும்	6
குறுணி விளைந்த இடத்தில் மூக்குறுணி	8
எஸ். ஆர். 26-பி ஒரு மறுதாம்புப் பயிரும் ஆகும்	9
பெரியகல்ராயன் மலையில் தோட்டக்கலை	10
கமுகு சாகுபடிக்கான சில முக்கிய குறிப்புகள்	12
நெற்பயிரில் "ஆனைக் கொம்பு"	14
கரும்பின் நோய்களும் தடுப்பு முறைகளும்	15
வெற்றிலைக் கொடியின் வாடல் நோயும் தடுப்பு முறைகளும்	16
முன்னேற்ற விவசாயப் பயிற்சிக்கு ஓர் வாய்ப்பு	18
விவசாயச் செய்திக் கதிர்	20
தீவிர எள் சாகுபடித் திட்டம்	21
உருளைக்கிழங்கு உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள்	22
கரும்பு தந்த பரிசு	23
தீவிர விவசாயத் திட்டத்தில் மானாவாரி நெல்	24
1963-ம் ஆண்டு ஜூன் மாதத்திய கால நிலை அறிக்கை	25
கால்நடை பராமரிப்பு	27
தழையுரத்தில் தன்னிறைவு எய்த கீழ்ப்பாவூர் பஞ்சாயத்து யூனியன் பெரும் முயற்சி.	28
ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்	29

விளம்பரங்கள் :

இப்பொழுது லிட்டர் அளவு	4
ராலீஸ் இந்தியா	9
ஜான்ஸ்டன் (வெர்டிகல் பம்புகள்)	13
வால்டாஸ்	19
ராஜா பண்ணைத் தோட்டம்	28

உரமிட்டு உணவைப் பெருக்கி நாட்டைக் காத்திடுவோம்

இப்பொழுது லிட்டர் அளவு

லிட்டர், மில்லி லிட்டர் என்ற மெட்ரிக் முகத்தலளவைகள் இப்பொழுது நாடு முழுதும் கட்டாய அமுலில் இருக்கிறது ● கிலோ கிராம் என்ற நிறுத்தலளவையும், மீட்டர் என்ற நீட்டலளவையும் சென்ற ஆண்டு கட்டாய அமுலில் வந்தது. இதனால் மெட்ரிக் முறை எடைகளும், அளவுகளும் மட்டுமே இந்தியாவில் சட்டப்படி அமுலில் இருக்கக் கூடிய முறையாகும் ● மெட்ரிக் எடைகள், அளவுகளை (லிட்டர், மீட்டர், கிலோ) அதன் உண்மையான மதிப்பை அறிந்து அப்படியே உபயோகித்தால், மெட்ரிக் முறை எவ்வளவு சுலபமானது என்பது தெரியவரும். ● மெட்ரிக் அளவுகளை சேர், வீசை அல்லது ஆழாக்கு போன்ற பழைய அளவுகளுடன் ஒத்துப்பார்க்காதீர்கள்.

துரிதமான சேவைக்கும், நேர்மையான வர்த்தகத்திற்கும்



முழு மெட்ரிக் யூனிட்டுகளில்

பொருள்களை வாங்குங்கள்

மலர் 20 | சோபகிருதுஸு ஆவணிமீ—1963—ஆகஸ்டு-செப்டம்பர் | இதழ் 8

"விதை தின விழா"

(விவசாயச் செய்தி நிலையம், சென்னை.)

நவீன விவசாயத்திற்கு அடிப்படை நல்ல வித்துதான். பயிர் செய்யும் நிலம் எவ்வளவு வளமுள்ளதா யிருந்தாலும், போதுமான உரமிட்டாலும் நாம் உபயோகிக்கும் வித்து பழுதுபட்டிருந்தால் பயனுள்ள பலன் ஒன்றும் எதிர்பார்க்க முடியாது. சிறந்த வித்துக்கள் உபயோகிப்பதன் மூலம் மாத்திரம் 15 சதம் கூடுதல் விளைச்சல் கிடைக்கிறது. உற்பத்தியைப் பெருக்க சிறந்ததொரு வழி "சிறந்த வித்துக்கள்" உபயோகித்தல். அனைவரும் நல்ல வித்தின் அவசியத்தை உணரவும், விவசாயிகள் அனைவரும் ஆர்வத்துடனும், ஊக்கத்துடன் நல்ல வித்தைச் சேகரித்துப் பாதுகாத்து, பயிரிட்டு, விளைச்சலைப் பெருக்கி, பெருகிவரும் மக்களுக்குப் போதிய உணவு உற்பத்தி செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபடச் செய்யும் நோக்கத்துடனும்தான் "விதை தின விழா" வருடா வருடம் ஆடி 18-ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது.

சிறந்த வித்துகளின் சிறப்புகள் பல.—சீதோஷ்ண நிலைக்கும், மண்ணின் தன்மைக்கும் ஏற்றவை; விளைச்சல் அதிகம் கொடுப்பவை; பூச்சி, பூசண நோய் தாக்காதவை; குறுகிய காலத்தில் நிறைய விளைபவை; சாய்ந்து விழாதது; வறட்சி தாங்கக் கூடியவை; நீர் தேங்கும் பகுதிகளுக்கேற்றது; மணம், ருசி, நல்ல சத்துள்ளது, முதலியன.

இத்தகைய சிறந்த குணங்களைக் கொண்ட வித்துக்களைப் பெருக்கவே "கிராம சகாயக் திட்டம்" தீட்டப்பட்டு பஞ்சாயத்துக்களால் நடத்தப்பட்டு வருகின்றன. பொறுக்கு வித்துக்களை பெருக்கி விநியோகம் செய்யும் 'கிராம சகாயக்குகளுக்கு' மணங்கொன்றுக்கு ரூ. 2 மான்யமாக அரசாங்கம் அளிக்கிறது.

நல்ல விதைகளைப் பெருக்குதல் மட்டும் போதாது, உரிய கவனத்தோடு விதைக்க வேண்டும். 90 சதவீதத்திற்கு மேல் முளைப்புத் தன்மை பெற்றிருக்க வேண்டும். விதைக்கு முன் பூசண நோய்களினின்று தடுக்க மருந்திடல் வேண்டும். விதைக்கப்பட்ட பின் நல்ல உரமிட்டு, பயிரைப் பாதுகாத்து, விளைந்த பயிரில் முற்றின, செழிப்பான கதிர்களையே விதைக்கென அறுவடை செய்து அடித்து நன்கு காயவைக்க வேண்டும். வேறு ரகங்களுடன் கலக்கா வண்ணம் விதைகளைப் பாதுகாக்க வேண்டும்.

ஆகவே நல்ல பொறுக்கு விதைகளின் முக்கியத்தை அறிந்து, பெருக்கி, விவசாய உற்பத்தியை பெருக்குதல் உழவு தொழிலில் ஈடுபட்டிருக்கும் அனைவரின் கடமையுமாகும்.

சென்னையில் விழா.—"விதை தின விழா" சென்னையில் ஆடி 18-ம் நாள் அன்று (3-8-63) ஆந்திர மகிள சபாவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருமதி சரோஜினி வரதப்பன், தமிழ்நாடு பாரத் சேவக் சமாஜ் முதல்வர் அவர்கள் தலைமை வகித்தார். இவ்விழாவில் ஆந்திர மகிள சபா தலைவி திருமதி ஹேமாவதி, மாநில விவசாயச் செய்தி அலுவலர் திரு. எம். ஜே. டேவிட், காய்கறி உற்பத்தி அலுவலர் திரு. கே. நாராயணன் முதலியோர் உரை நிகழ்த்தி விழாவில் கலந்து கொண்டார்கள். சிறந்த வித்துகளின் சிறப்பையும் குறிப்பாக காய்கறி உற்பத்தியை பெருக்க எடுக்க வேண்டிய முயற்சிகளைப் பற்றியும் எடுத்துக் கூறினர்.

பின்னர் விழாவில் கலந்து கொண்டவர்கள் காய்கறி விதைகளையும், செடிகளையும் நன்கு தயாரிக்கப்பட்ட பாத்திகளில் நடவு செய்தார்கள்.

பொறுக்கு வித்து பெருகி விளையும்.

தஞ்சையில் உணவு உற்பத்தியும் அதனைப் பெருக்கும் வழிகளும்

[தி. பி. சண்முக நயினர், பி.எஸ்ஸி. (விவ.), மாவட்ட விவசாய அலுவலர், தஞ்சாவூர்.]

தஞ்சை மாவட்டத்தில் பதினேரு லட்சம் ஏக்கர் நஞ்சைகளில் ஆண்டுதோறும் பதினன்கு லட்சம் டன் நெல் சாகுபடியாகிறது. இம்மாவட்டத்தில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு ஏக்கர் சராசரி நெல் விளைச்சல் 1200 ராத்தல், தற்பொழுது 2000 ராத்தல் இருப்பினும் தஞ்சை விவசாயிகள் இன்னும் எவ்வளவோ விவசாய அபிவிருத்திகளை தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதுடன் இப்பொழுதிருக்கும் நெல் விளைச்சலையும் இரு மடங்கு அதிகரிக்கவேண்டிய அவசியமுமிருக்கிறது.

நெல்லின் விளைச்சலை எவ்வாறு இரட்டிக்க முடியும்?

(1) "விளையும் பயிர் முளையிலே தெரியும்". விவசாயி, வேறு எந்தவிதமான செய்நேர்த்தி செய்யாது போனலும், நல்ல பொறுக்கு விதையை மட்டும் உபயோகித்தாலே 15 சதவிகிதம் அதிக மகசூலை அடைய முடியும்.

இம்மாவட்டத்திற்கு சிபாரிசு செய்யப்படும் முக்கிய நெல் ரகங்கள்—நெல் தினுசும் பெயரும்:

குறுவை—ஏ.டி.டீ. 3 (சிவப்புக் குறுவை)
ஏ.டி.டீ. 19 (சரப்பள்ளி)
ஏ.டி.டீ. 20 (ஒட்டுக்குறுவை)
டி.கே.எம். 6 (சன்ன சொர்ணவாரி).

சம்பா, தாளடி—ஏ.டி.டீ. 8
கோ. 19
கோ. 25
கோ. 30 (நீர்ப்பிடிப்புப் பள்ளத்தாக்குகளுக்கு)
பி.டி.பி. 15 (களர் நிலங்களுக்கு)
டி.கே.எம். 1 (புழுதிக்கால்களுக்கு).

விதையை சென்ட் நாற்றங்கால்களில் விதைக்கவும். நாற்றங்காலுக்கு போதிய உரமிட்டு ஒரு சென்டுக்கு ஒரு ராத்தல் விதை வீதம் தெளிக்கவும். குறுவைக்கு 10 மரக்காலும், சம்பா, தாளடிக்கு 8 மரக்கால் விதையுமே தேவை. குறுவையில் 6 அங்குலம் 4 அங்குலமும் (வரிசைக்கு வரிசை 6 அங்குலம், செடிக்குச் செடி 4 அங்குலம்) சம்பா, தாளடிப் பயிர்களில் 10 அங்குலம், 6 அங்குலமுள்ள வரிசைகளினும் நாற்று நடவும். நட்டு பதினைந்து தினங்களுக்கு ஒரு முறையாக, குறுவையில் ஜப்பானிய இடை உழவுக் கருவியை உபயோகப்படுத்துவதால் சிறந்த பலனடையலாம்.

தற்பொழுது பொறுக்கு விதை வினியோகத்தின் முழுப் பொறுப்பும் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளது. 'கிராம சகாயக் திட்டம்' மூலமாக பொறுக்கு விதைகள் பரவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சாகுபடி விஸ்தீர்ணத்தில் மூன்றில் ஒரு பாகம் ஆண்டுதோறும் பொறுக்கு விதையை அடையும் வகையில் கணக்கிடப்பட்ட விஸ்தீர்ணத்தில், பஞ்சாயத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சகாயக்குகளுக்கு மட்டும், ஆண்டுதோறும், அரசினர் விதைப் பண்ணைகளின் மூலம் விதை வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட விவசாயிகளுக்கு கிராம சகாயக்குகள் அபிவிருத்தி செய்த விதை விநியோகிக்கப் படும். பஞ்சாயத்து தலைவராலேயே நிர்ணயிக்கப்படும் விலையின்படி இந்த விவசாயிகள், ரொக்கத்திற்கோ அல்லது மாற்று நெல்லுக்கோ தேவையான பொறுக்கு விதையை வாங்கிக் கொள்ளலாம். ஒரு விவசாயிக்கு முதல் ஆண்டு பொறுக்கு விதை கிடைத்தால், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கும் விதை கொடுக்கப்படமாட்டாது. தாங்களே இவ்விரு ஆண்டுகளுக்கும் விதையை சேகரம் செய்துவைத்துக் கொள்ளவேண்டும். மறுபடியும் நான்காவது ஆண்டில், முன்போலவே கிராம சகாயக் விதைப் பண்ணையிலிருந்து வரும் விதை நெல்லைப் பெற்றுக் கொள்ளலாம். இம்முறைப்படி ஒவ்வொரு கிராமத்திலும் மூன்றே ஆண்டுகளில் முழுப் பரப்பிலும் பொறுக்கு விதை பரவி விடுவதுடன், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொருவருக்கும் புதிய விதையும் கிடைத்து வரும். எனவே ஒவ்வொரு விவசாயியும் தனது ஊர் பஞ்சாயத்துத் தலைவரையும், கிராம சேவக்கையும் கலந்து கொண்டு நல்ல பொறுக்கு விதையையே வாங்கி பயிரிடும்படி வேண்டிக்கொள்ளப்படுகிருர்கள்.

(2) **உரமிடுதல்.**—நெற்பயிருக்கு முக்கியமாக வேண்டியது ஏராளமான தழை உரமே. தழை போடாமல் வெறும் ரசாயன உரங்களை மட்டும் போடுவது நாளடைவில் மண்வளத்தை பாதிக்கும். ஏக்கர் ஒன்றுக்கு 5000 ராத்தல் அல்லது 5 வண்டி தழைகளாவது போடவேண்டும்.

நெல் அறுவடைக்குப் பின், வயல்களிலேயே தழை உரச் செடிகளை பயிரிடுவதுதான் லாபகரமானது. களிமண் பூமியில் நரிப் பயரும், மணல் பாங்கு பூமியில் கொளுஞ்சி, சணலும், களர் பூமிகளில் தக்கைப் பூண்டு, செஸ்பேனியா (சீமை அகத்தி) வும் பயிர் செய்வது நல்லது. விவசாயிகளுக்குத் தேவையான விதைகளை, விவசாய அலுவலகத்திலிருந்து, 15 சத சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யும் தழைப்பயிர் விதைகளை விவசாய அலுவலகத்திற்கே விற்பார்களானல், மூட்டை ஒன்றுக்கு உள்ளூர் விலையுடன், ரூ. 4 மானியமாகவும் கிடைக்கிறது. கோடையில் தண்ணீர்ப் பாய்ச்ச வசதியுள்ளவர்கள், செஸ்பேனியாவை ஏக்கர் ஒன்றுக்கு 60 ராத்தலுக்கு (10 மரக்கால்) குறையாமல் விதை தெளித்து, தனிப்பயிராக சாகுபடி செய்தால், ஒரு ஏக்கரில் குறைந்தது 40,000 முதல் 60,000 ராத்தல் (40 முதல் 60 வண்டி) தழை கிடைக்கும். இது 8 முதல் 12 ஏக்கருக்கு எரு இடலாம்.

தாளடிப் பயிருக்கு, தஞ்சை மாவட்டத்தில், பெரும் பாலானேர் தழையே போடுவதில்லை. குறுவை வயல் களில் வரப்பு ஓரங்களில், நான்கு புறமும் செஸ் பேனியா நாற்றுக்களை வரிசைகளுக்கு ஒரு சாண் இடை யில், மூன்று வரிசைகளில் நட்டு வந்தால், தாளடிக்கும் தேவையான தழை கிடைக்கும். ஏக்கர் ஒன்றுக்கு 25 நயா பைசா விதையின் விலை ஒன்றுதான் செலவு. இன்னும் வயல்களில் உபயோகத்திலில்லாத பெரிய வரப்புகளிலும், வயல் ஓரங்களிலும், அருகாமையிலுள்ள திடல்கள், தென்னை, சவுக்கு, வாழைத் தோட்டங்களின் ஓரங்களிலும் கிளிரிசிடியா (சீமை உதியன்) செடியை வைத்துப் பயிரிட்டால், ஏராளமான தழை கிடைக்கும். தழையை உற்பத்தி செய்து, ஏக்கர் ஒன்றுக்கு 5000 ராத்தலுக்கு (5 வண்டி) குறையாமல் போட்டு நெற்பயிர் செய்வது மிகவும் லாபகரமானது.

(3) தழைகளுடன் ரசாயன உரங்களையும் வயல் களுக்குப் போட்டால் விளைச்சலை பன்மடங்கு அதிகரிக்கலாம். நெல்லுக்கு ஒரு ஏக்கருக்கு சி. ஏ. என். 150 ராத்தல், சூப்பர் பாஸ்பேட் 150 ராத்தல், மியூரியேட் ஆஃப் பொட் டாஷ் 50 ராத்தல் போடவேண்டும். இத் தேவையானது மண்ணிற்கேற்றவாறு மாறுமாதலால் ஒவ்வொரு மிராசு தாரும், தன்னுடைய நிலத்தின் மண்ணை ஆடுதுறை விவ சாய ஆராய்ச்சிப் பண்ணையிலுள்ள மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி இலவசமாகப் பரிசோதனை செய்துகொண்டு சிபாரிசு செய்யப்படும் அளவு ரசாயன உரங்களை நிலத்திற்கு இட்டால், அதிக லாபமாயிருக்கும். மாதிரி மண் எடுப்பதற்கு கோடை காலத்தில் நெல் அறுவடைக்குப் பின் உங்கள் ஊர் கிராம சேவக்கை நாடுங்கள்.

சூப்பர் பாஸ்பேட்டையும் பொட்டாஷ் எருவையும் நடவுக்குமுன் கடைசி உழவிலேயே போட்டுவிடவேண்டும். அமோனியம் சல்பேட்டை போடக்கூடிய அளவில், பாதியை நடவிற்கு முன்பும் மறுபாதியை குறுவைப் பயிருக்கு நட்ட முப்பதாம் நாளிலும், சம்பா தாளடிப் பயிர்களுக்கு நட்ட 40 முதல் 50 நாளிலும் போடுவதுதான் நல்ல விளைச்சலைக் கொடுக்கும்.

(4) நல்ல பொறுக்கு விதையும், தகுந்த எருக்களையும் உபயோகித்தும் நன்ருக வளர்ந்துவரும் பயிரை, அதன் எதிரிகளான பூச்சிகள், நோய்களிடமிருந்து காப்பாற்ரு விட்டால் நாம் எதிர்பார்த்த விளைச்சலை அடையமுடியாது. இலைப்புள்ளி நோய், தூர் அழுகல் போன்ற பூஞ்சண நோய்களிலிருந்து காப்பாற்றுவதற்கு விதையை முளைக்க வைப்பதற்கு முன்பே அக்ரசான், செரஸான் போன்ற மருந்து கலந்து தெளிக்கவேண்டும். பயிரை பல பருவங் களில் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, நாற்றங் காலில் நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரத்திற்குமுன், முதல் தடவையாகவும், நாற்று நட்டபின் 15 நாள் கழித்து இரண்டாம் முறையும், கதிர் வரும் சமயத்தில் மூன்ரும் முறையும், பூச்சி மருந்துகளை தெளிப்பது நல் லது. நோய்களையும் பூச்சிகளையும் தடுக்க முன் எச்சரிக்கை யாகவே, மேற்சொன்னபடி மருந்து தெளிக்கவேண்டும். இதனுல் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10 செலவழிந்தால்கூட விளைச்சலை இருபது சதவிகிதம் அதிகரிக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை.

பூச்சி, பூஞ்சண நோய்களைவிட, மிகப் பெரிய விரோதி எலிகள்தான் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஒரு ஜோடி எலிகள், ஒரு வருஷத்தில் 600 முதல் 800 வரை பெருகி விடுகின்றன என்ருல், அவைகளால் அடையும் நஷ்டத்திற்கு ஒரு அளவேயில்லை. கிராம மக்கள் எல்லோருமே ஒற்றுமையாக, எலிகளை எதிர்த்து போராடினுலொழிய, நமது பயிர்களை அவைகளிடமிருந்து மீட்பது அரிது. கோடையில் எலிப் பொந்துகளை வெட்டிப் பிடித்தும் மற்ற காலங்களில் எலி மருந்துகள் வைத்தும் கிட்டிகள் உபயோகித்தும் எலிகளை ஒழிக்கவேண்டும்.

எல்லா விவசாயிகளும் இக் கட்டுரையில் கூறப்பட்டுள்ள திருந்திய விவசாய முறைகளைக் கையாண்டால் 30 மூட்டை நெல்லுக்குக் குறைவில்லாமல் விளைச்சலைப் பெறுவர்.

(2-ம் அட்டைப்பட விளக்கம்)

"உலக சுகாதார தின விழா"

"உலக சுகாதார தின விழா" 1963-ம் வருடம் ஜூலை மாதம் 27-ந் தேதியன்று சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது.

விழாவிற்குத் தலைமை வகித்த தமிழ்நாடு கவர்னர் உயர்திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் உலகப் பசிப் பிணியையும், போஷாக்குச் சத்தில்லாத உணவு உண்பதையும், குறிப்பாக முன்னேருத நாடுகளினின்று அகற்ற பாடுபட வேண்டும் என்று வலியுறுத்தினர். தமிழ்நாடு தானியங்கள், பழவகைகள், காய்கறி உற்பத்தியில் சிறந்து விளங்குவதையும் பாராட்டினர். இவ்விழாவை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியையும் திறந்து வைத்தார். பொது சுகாதாரத்துறை, விவசாயம், மீன்வளர்ப்பு, கால்நடை பராமரிப்புத் துறைகளும், பெண்கள் கிறிஸ்துவக் கல்லூரி, ராணி மேரிக் கல்லூரி, எஸ்.ஐ.இ.டி. கல்லூரி, சேவாசங்கம் போன்ற இதர ஸ்தாபனங்களும் கண்காட்சியில் பங்கெடுத்தனர்.

திறந்த வெளியில் அமைக்கப்பட்டிருந்த 'மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்டமும்', தொட்டியில் வளர்க்கப்பட்ட புடலையும், கவர்னரின் பாராட்டுதலைப் பெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை டாக்டர் (குமாரி) ஏ. பி. மரைகார், மருத்துவத்துறை நெறியாளர் வரவேற்ருர்.

டாக்டர் எப். தியோபில்லஸ் மனையியல் பிரிவு பேராசிரியர், பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி, டாக்டர் கே. வி. திருவேங்கடம், துணைத்தலைவர் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி அவர்களும் விழாவில் உரையாற்றினர்.

குறுணி விளைந்த இடத்தில் முக்குறுணி

(து. முத்துசாமி)

ஆர்வமுள்ள உழைப்பாலும் விடாமுயற்சியாலும் 2,500 ராத்தல் விளைந்த நிலத்தில், 5,000 ராத்தலாகப் பெருக்கி இன்னும் அதிகரிக்க முடியும் என்று எடுத்துக் காட்டியவர் திரு. யாகுப் கான்.

வெற்றிக்கு வழி

திரு. யாகுப் கான், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருமங்கலக்குடி என்ற கிராமத்தில் ஒரு சிறிய விவசாயி. அவருக்குச் சொந்தமானதெல்லாம் ஒன்றரை எக்கர் நஞ்சையும், எக்கருக்குக் குறைவான புஞ்சையும் தான்.

திரு யாகுப்கான், விவசாய விஸ்தரிப்பு அலுவலருடன் பயிரைப் பார்வையிடல்.

பண்ணையின் பரப்பை பெருக்காமலே அதன் வருவாயைப் பெருக்க அவர் கூறும் வழி "சொந்த கவனிப்பில் சிறந்த முறையில் உழவு, விதை தேர்ந்தெடுத்தல், விதைப்பு, நடவு, மருந்தடித்தல், உரமிடல், களையெடுத்தல் முதலிய சாகுபடி அலுவல்களைச் செய்து வருதல்."

இவர் 1955–56-ல் 5,002 ராத்தல் விளைவித்து நெல் மகசூல் போட்டியில் மாவட்ட பரிசு பெற்ருர்.

வழிகாட்ட **"தஞ்சை மாவட்ட தீவிர சாகுபடித் திட்டம்"** வந்ததும் திட்ட அலுவலர்களைச் சந்தித்து பண்ணை திட்டம் தீட்டி தீவிர சாகுபடி முறைகளைக் கைப்பற்றி வருகிருர்.

* இலேசாக உழுது, செஸ்பேனியா, கிளிரிசீடியா தழையுரமிட்டு, பொறுக்கு விதை எக்கருக்கு 25 ராத்தல் வீதம் மருந்திட்டு, சீராக விதைத்து சிறந்த நாற்றங்கால் தயாரித்தார்.

* குறுவைக்குப் பின் இரண்டு சால் ஓட்டி, நீர்கட்டி பின் 5,000 ராத்தல் தழையுரமிட்டு இரண்டுழவு செய்தார். ஏழு நாள் தண்ணீர் கட்டினுர்.

* நடவுக்கு முன் இரண்டு சால் உழுது 150 ராத்தல் சூப்பர் இட்டு ஒரு சால் உழுது கலக்கி, 9 அங்குலம் இடைவெளியில் வரிசையில் நடவு செய்தார்.

* நட்டு 20 நாளுக்குப் பின் முதல் களையெடுத்து, மேலுரம் இட்டார். . மணிப்பிடிக்கையில் இரண்டாம் தடவை மேலுரம் இட்டார்.

* பூச்சிகள், நோய்கள் வருமுன் மருந்தடித்தார். முதல் களையெடுப்பிற்குப் பின் டி.டி.டீ. 5 சதம், பி.எச்.சி. 10 சத மருந்தும் தூவினுர். இரண்டாவது களையெடுப்பிற்குப் பின் பாராத்தையான் மருந்து தெளித்தார்.

* 6,000 ராத்தலுக்குக் குறையாது மகசூல் எதிர்பார்க்கிருர். தென்னை, மா, கொய்யா மரங்களும் திரு யாகுப்கான் தோட்டத்தில் உண்டு. கவனத்துடன் வளர்த்து வருகிருர். நல்ல பலனும் அளித்து வருகிறது.

வருடா வருடம் மகசூலைப் பெருக்கிக் கொண்டே வரும் திரு. யாகுப் கான் பாராட்டுதலுக்குரியவர் மட்டுமன்று மற்றவர்கள் பின்பற்றக் கூடியவருமாவார்.

நன்றி—பண்ணைத் தகவல் வெளியீடு, உணவு, விவசாயத் துறை அமைச்சரவை, புதுடில்லி.

நிலக்கடலை தீவிர சாகுபடி திட்டச் சலுகைகளனைத்தையும் பயன்படுத்துவீர்

எஸ்ஆர். 26-பி ஒரு மறுதாம்புப் பயிரும் ஆகும்.

[அ. சுப்பிரமணியன், பி.எஸ்ஸி. (ஏஜி.), பிராந்திய ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.]

ஒரிஸ்ஸா மாகாணம் அளித்த எஸ்ஆர், 26-பி என்ற நெல் ரகம் களரைத் தாங்கும் சக்தியுடையது. இதை ஆகஸ்டு—டிசம்பர் மாதங்களில் பயிரிட்டு 4½ மாதங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 1,500—2,000 ராத்தல் வரை மகசூல் எடுக்கின்றனர்.

எஸ்ஆர். 26-பி மறுதாம்புப் பயிரிலும் நல்ல மகசூல் கொடுக்கிறது. இந்த ரகத்தைப் பயிரிட்டு 4½ மாதங்களுக்குப் பின் சராசரியாக 1,500—2,000 ராத்தல் மகசூல் அடையும். இதனைப் பயிரிடும் விவசாய மக்கள் இன்னும் சிறிது கவனம் செலுத்தினுல் மேலும் 560 ராத்தல் ஒன்றரை மாத காலத்தில் அடையலாம். ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் விதை உற்பத்திக்கென மற்ற ரகங்களைப் போல எஸ்ஆர். 26-பி ரகமும் பயிரிடப்பட்டது. ஜூலை மாதக் கடைசியில் விதை விட்டு செப்டம்பர் முதலிலேயே நாற்றுக்கள் விடப்பட்டன. அறுவடைக்குப் பின் 20 தினங்களில் பயிர் மறுபடியும் பசுமை கண்டு புதுமை அளித்தது. அறுக்கப்பட்ட தாள்களில் கணுக்களிலிருந்து கிளைகள் வெடித்து மறுதாம்புப் பயிர் தென்பட்டது. இந்த மறுதாம்புப் பயிர் முதற்பயிர் அறுத்த ஐம்பது நாட்களில் அறுவடைக்கு வந்தது. கணக்கிட்டுப் பார்த்ததில் ஏக்கர் ஒன்றுக்கு 560 ராத்தல் மகசூல், மறுதாம்புப் பயிர் மூலம் கிடைத்தது.

ஆயினும் இதன் அரிசி சன்னமாக இல்லாது சிறிது பெரியதாக உள்ள காரணத்தினுல் மற்ற ரகங்களைவிட இதன் விலை சற்று குறைவே. அரிசியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் இந்த ரகத்தை மற்ற சன்ன ரகங்களுடன் கருச்சேர்க்கை மூலம் இணைத்து களரை எதிர்க்கும் சக்தியைக் கொண்டும் தரத்தில் உயர்ந்ததுமான நெல் ரகங்களை உற்பத்தி செய்ய ஆராய்ச்சி செய்யப்பட்டது. இதன் பயனுக பி.வி.ஆர். 1 என்ற புது ரகம் கண்டுபிடிக்கப்பட்டது.

மறுதாம்புப் பயிரில் நல்ல மகசூல் காண விவசாயிகள் முக்கியமாக கவனிக்க வேண்டியவை (1) முதற் பயிர் கதிர் முதிர்ந்தவுடனேயே தாள்காயும் வரைக் காத்திராமல் சிறிது பச்சையாக இருக்கும்போதே அறுவடை செய்தல்; (2) அறுவடைக்குப் பின் மறுதாம்புப் பயிருக்கு நீர் கட்டவேண்டும். இம் முறையைப் பின்பற்றுவதன் மூலம் செலவு ஏதுமின்றி சுமார் ஐந்து மூட்டை தானியம் அதிகம் கிடைப்பதால் எல்லோரும் இதை முயற்சி செய்து பார்ப்பது நலம்.

தந்தையைப்போல் தனயன்...

ஆம், சில விஷயங்களில்தான்...முக்கியமான சிலவற்றிலோ? ஊஹூம்! ராமன் தன் தந்தையைப்போல் ஒரு விவசாயியாகத்தான் இருப்பான். ஆனுல் அவன் நிலத்தை உழுது பயிரிடும் விதமே வேறுதான். தரத்திலுயர்ந்த விதைகளையே விதைப்பான். விஞ்ஞான ரீதியில் மாற்றி மாற்றிப் பயிரிடுவான். நீர்ப்பாசன வசதிகளை நன்கு பயன்படுத்துவான். ராலீஸ் தயாரிப்பதுபோன்ற சமநிலை உரக்கலவைகளைக்கொண்டு தனது நிலங்களை வளப்படுத்துவான். ராலீஸ் தயாரிக்கும் "மரம் மார்க்" உரங்கள் இந்திய விவசாயிகளுக்குத் தரமான, வளமான விளைச்சலை அளிக்கின்றன. ராலீஸ் உரங்களில் முதலீடு செய்யப்படும் 1 ரூபாய், 4 ரூபாய் அதிகப்படி விளைச்சலைத் தருகிறது.



RALLIS TREE BRAND FERTILIZERS

ராலீஸ் இந்தியா லிட்.

இந்தியா முழுவதும்

RFY-29 TAM

பெரியகல்ராயன் மலையில் தோட்டக்கலை

(வி. நவரத்தினம், வெ. இலக்குமணன்.)

சேலம் மாவட்டத்தில் பெரியகல்ராயன் மலையில் வசிக்கும் ''மலையாளிகளின்'' பொருளாதார நிலைமையை உயர்த்தும் சீரிய நோக்கத்துடன் தோட்டக்கலைத் திட்டம் ஒன்று அரசினரால் 1960-ம் வருடம் இறுதியிலிருந்து செயல்பட்டு வருகிறது.



மலையில் ஒரு கிராமத்தின் தோற்றம்

இத்திட்டத்தின் கீழ் இம்மலைவாழ் குடிகளுக்கு பழச் செடிகள், காய்கறி விதைகள், உருளைகிழங்கு, ரசாயன உரம், பூச்சி, பூஞ்சண மருந்து வகைகள் இலவசமாக கொடுக்கப்பட்டு விஞ்ஞான முறையில் பயிர் செய்ய உதவி அளிக்கப்படுகிறது.

இம்மலையில் பழ வகைகளில் மா, பலா, வாழை இவைகளே மிகவும் குறைந்த அளவில் இருக்கின்றன. மா பெருவாரியாக நாட்டு மரங்களாக உள. இவைகளின் மூலம் கிடைக்கும் மகசூலும், அதன் தரமும் குறைந்ததாயுள்ளன. தற்சமயம் தேர்ந்தெடுக்கப்பட்ட மா, பலா ஒட்டு ரக செடிகளை திட்டத்தின் கீழ் இலவசமாக பெறலாம். சிறந்த சப்போட்டா ஒட்டு செடிகள் குன்னூர், தலகிரி முதலிய கிராமங்களில் நன்ருக வளர்வதிலிருந்து, இந்த பழ ரகம் இம்மலையில் விருத்தியடைய அதிக வாய்ப்பு இருப்பது புலனுகிறது. மேலும் மலைவாசிகள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நல்ல செடிகளை, ஆடு மாடுகள், பன்றி முதலியனவற்ருல் சேதம் விளைவிப்பதை, கூண்டுகள் அமைப்பதன் மூலமும், வேலிகள் கட்டுவதன் மூலமும், தவிர்க்கலாம். இச்செடிகளுக்கு கோடை மாதங்களில் தவருமல் தண்ணீர் விட்டு, செடிகளின் பாத்திகளை அகலப்படுத்தி, கொத்தி களை எடுத்து, மாரி காலத்தில் எருவிட்டால் செடிகள் துரிதமாக வளரும். மேற்கூறியவையல்லாமல், சிறந்த வகை கொய்யா, மாதுளை பதியன்கள், சீதா, உயர்ந்த ரக கோ, 1 பப்பாளி முதலியன இம்மலைப் பிராந்தியத்தில் நல்ல முறையில் பயிர் செய்யப்படுகின்றன.



குன்னூர் மாதிரித் தோட்டத்தில் கோ. 1 பப்பாளியின் அருகே இ. சி, பிராண்ட் அம்மை.

காய்கறி வகைகளில் முள்ளங்கி, கத்தரி, வெண்டை, தக்காளி, பாகல், புடல், பீர்க்கு, பூசணி முதலியன எல்லா பட்டத்திலும் பயிர் செய்ய முடிகிறது. காய்கறி சாகுபடி மூலம் லாபமடைவதோடல்லாமல் சத்துள்ள பயிர்களை பெருக்கி உபயோகிக்கவும் ஏதுவாகிறது. காரட், பீன்சு, முட்டைகோசு இவைகளும் நன்கு விளைகின்றன.



மலையில் விளைந்த சிவப்பு முள்ளங்கி



மலைவாசி நடுகவுண்டன் உழைப்பின் பெரு
மிதத்துடன் காணப்படுதல்

இம்மலைவாசிகள் 'கிரேட் ஸ்காட்' உருளைக்கிழங்கு ரகத்தை கடந்த இரண்டு ஆண்டுகளாக பயிர் செய்து நல்ல பலன் அடைந்து வருகிறார்கள். விளைச்சலை அதிகரிக்க பயிருக்கு தேவையான கம்போஸ்ட் உரம், நஞ்ச நாடு கலப்பு உரம் இவைகளை தவறாமல் உபயோகிக்க வேண்டும் ; உகந்த காலத்தில் களை எடுத்து மண் அணைக்கவேண்டும்.

தென்னை ஏற்கனவே இம்மலையில் எல்லா கிராமங்களிலும் காணப்படுகிறது. மலைவாசிகளின் கவனக் குறைவு காரணமாக மரங்களின் காய்ப்பு மிகக் குன்றியிருக்கிறது. ஆண்டுதோறும் மரங்களைச் சுற்றி கொத்திவிட்டு, பாத்திகள் அமைத்து எருவிட்டால், பெரிய மரங்களின் காய்ப்பு அதிகமாகும். திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் உயர்ந்த ரக தென்னங்கன்றுகளை [ஜாவா ஜெயண்ட், டால் (TALL)] நன்றாக கவனித்து கூண்டுகள் அமைத்து, கால்நடை சேதத்தை தவிர்த்து, எருவிட்டு, தண்ணீர் பாய்ச்சுவதின் மூலம் எதிர்காலத்தில் மலைவாசிகள் நல்ல பயனடையலாம். அவ்வப்போது பி.எச்.சி. 10 சதவிகித தூளை கன்றுகளை சுற்றி மண்ணில் தூவி கறையான் தொல்லையை தவிர்க்கவேண்டும்.



இலை உதிர்க்கும் கடுக்காய் மரம்

மேலும் கல்ராயன் மலையில் 'கடுக்காய்' சிறந்த வியாபாரப் பொருளாக இருக்கிறது. தற்போது பெரிய மரங்களுக்கு மலைவாசிகளின் உரிய கவனிப்பு இல்லை. இயற்கையாக விதைப் பெருக்கத்தின் மூலம் உண்டாகும் நாற்றுகளை மழை காலத்தில் எடுத்து பாதுகாப்புடன் நட்டு மேலும் வருவாயை அதிகரிப்பதில் மலைவாசிகள் ஆர்வம் காட்டவேண்டும். ஆடு மாடுகளால் தானாக முளைக்கும் செடிகளுக்கு நாசம் விளைவிக்காமல் பாதுகாக்கவேண்டும். கடுக்காய் ஒரு முக்கியமான 'வனப் பொருள்'. மருந்து வகைகளில் உபயோகப்படுவதல்லாமல், வியாபார ரீதியில் 'தோல் பதனிடுதல்' தொழிலிலும் மிகவும் தேவைப்படுகிறது. நாளுக்கு நாள் இதன் விலை ஏறிக்கொண்டே போகிறது. தற்சமயம் நான்கு வள்ளம் (20 பட்டணம் படி) கொண்ட ஒரு மூட்டையின் விலை ரூ. 8 முதல் 11 வரை இருக்கிறது. ஒரு மரம் சாதாரணமாக ஆண்டுதோறும் ரூ. 24-க்கு மகசூல் கொடுக்கிறது. இதே போல் பச்சை மலையிலும் கடுக்காய் நன்றாக விளைகிறது. பச்சைமலை வாசிகள் வியாபாரிகளால் ஏமாற்றப்படாமலிருக்க அரசினரால் கடுக்காய் விற்பனை சங்கம் ஒன்று நல்ல முறையில் செயல்படுத்தப்படுகிறது.. இம்முறையில் கல்ராயன் மலையில் விளையும் கடுக்காயை விற்பனை செய்து மலைவாசிகள் லாபமடைய இங்கும் ஒரு விற்பனை சங்கம் ஏற்படுத்துவது மலைவாசிகளின் முன்னேற்றத்திற்கு அடிகோலுவதாகும்.



சிறந்த உருளைகிழங்கு தோட்டம்

பருத்தி வளர்ச்சித் திட்டம் விவசாயிகளுக்கு பெருந்துணை

கமுகு சாகுபடிக்கான சில முக்கிய குறிப்புகள்

[மா. மகாலிங்கம், M.Sc. (Ag.), D.H., கமுகு பெருக்க அலுவலர், கோவை.]

மண் வளமும் வானிலையும் (Soil and Climate).—கமுகு நீர் பதம் அதிகமாயுள்ள உஷ்ண பிரதேசத்து (Humid tropic) பயிராயினும், சென்னை மாநிலத்தில் இதை கடல் மட்டத்திலிருந்து 3,000 அடி உயரம் வரை பயிரிடலாம். மணற் பாங்கான அல்லது களிமண் பூமிகள் ஏற்றதல்ல. வடிகால் வசதியும், நீர் பாசன வசதியும் உள்ள மற்ற எல்லா நிலங்களிலும் இதை பயிரிடலாம்.

நடவு முறை

சரியான இடைவெளி தேவை.—கமுகு மரங்களிலிருந்து மிகுந்த பலனை அடைய மரத்திற்கு மரம் சரியான இடைவெளி தேவை. இடைவெளி குறுகினால் மரத்தின் வளர்ச்சியும் பலனும் பாதிக்கப்படும். இடைவெளி அதிகமானால் மரத்தின் எண்ணிக்கை குறைகிறது. மொத்தத்தில் மகசூல் (Yield per unit acre) குறைகிறது.

சாதாரணமாக எல்லா இடங்களிலும் 8′×8′ அடி இடைவெளி போதும். ஆனால் மண் வளத்தைப் பொருத்து 8′×7′ அடி அல்லது 12′×6′ அடி இடைவெளி விட்டு நடலாம்.

அதாவது, ஒரு ஏக்கர் நிலத்தில் சுமார் 600 முதல் 750 மரங்கள் வரை நடலாம். வளம் குறைந்த இடங்களில் இடைவெளி அதிகமாகவும், வளம் மிக்க நிலங்களில் இடைவெளி குறைந்தும் இருக்கவேண்டும்.

நிழல் மிகவும் முக்கியம்.—இளங்கன்றுகள் சரியானபடி வளர்வதற்கு நிழல் மிகவும் முக்கியம். இதற்கு முதலில் வாழை கன்றுகளை கமுகுக்கு எவ்வளவு இடைவெளி வேண்டுமோ, அவ்வளவு இடைவெளி விட்டு நடவேண்டும். அது வளர்ந்து நிழல் தரும் உயரத்தை அடைந்த பின் கமுகு கன்றுகளை நடவேண்டும். வாழை நிழல் தருவதுடன், கமுகு கன்றுகள் வளர்ந்து பலன் தரும் வரை, வருமானமும் கொடுக்கும்.

வாழை போட இயலாத இடங்களில் செஸ்பேனியா போன்ற பசுந்தாள் உரச் செடிகள் நிழலுக்காக நடவேண்டும்.

அதே காலத்தில் தோட்டத்தின் தெற்கு மேற்கு பக்கங்களில், உயரமாக வளரக்கூடிய தென்னை, பலா, மற்றும் அவ்விடத்திற்கு ஏற்ற வேறு மரங்களையும் நடவேண்டும். வெப்பம் அதிகமாயும், மழை குறைவாயுமுள்ள இடங்களில் தோட்டத்தைச் சுற்றிலும் தென்னையும், பின் வேலியோரமாக கிளிரிசிடியா (Glyricidia) போன்ற பசுந்தாளுர மரங்களை நெருக்கமாகவும் நடவேண்டும். இவை மாலை வெயில் கமுகு தண்டுகளில் நேராக படாமல் தவிர்ப்பதுடன் காற்றின் வேகத்தையும் குறைத்து, அவ்விடத்தின் நீர் பதத்தை (Humidity) அதிகமாக்கி கமுகு நன்றாக வளர்வதற்கேற்ற சூழ்நிலையை உண்டாக்கும்.

பொறுக்கு கன்றுகளை நடுவது நன்று.—காய்ப்பு சக்தி (Yielding capacity), காய்ப்பின் தன்மை முதலியவை பெரும்பாலும் பரம்பரையாக வரக்கூடிய குணாதிசயங்கள். ஆதலால் அதிக பலன் கொடுக்கக்கூடிய ஒருதரப்பட்ட மரங்களையுடைய ஒரு தோப்பினை உண்டாக்க வேண்டுமாயின் சிறந்த மரங்களின் வழியில் உற்பத்தி செய்யப்பட்ட பொறுக்கு கன்றுகளை உபயோகிக்கவேண்டும்.

நடும் முறை.—கன்றுகளை நடுவதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னர், மேற்கூறியபடி சரியான இடைவெளி விட்டு, கன்றுகள் நடவேண்டிய இடங்களை குறித்து, அவ்விடங்களில் குழிகள் வெட்ட வேண்டும். சாதாரணமாக எல்லா இடங்களுக்கும் 2½ அடி கன அளவுள்ள குழிகள் தேவை. வடிகால் வசதி குறைந்த களி மண் பிரதேசங்களில் குழியின் ஆழம் 1½ அடியிருந்தால் போதும்.

பின், மேல் மண்ணுடன் கம்போஸ்ட் அல்லது தொழு உரம் (Compost or Farm Yard Manure) கலந்து, அக்கலவையால் குழிகள் மூடிவிடவேண்டும். அவ்வாறு மூடும் பொழுது, குழியை முழுவதுமாக மூடாமல், மேலிருந்து 3 அங்குல ஆழம் வரை நீர்பாசனத்திற்கு இடம் விடவேண்டும். இக் குழிகளில் மையம் பார்த்து வரிசைகளில் கன்றுகளை நட்டு அது உறுதியாக இருக்கும்படி அதை சுற்றியுள்ள மண்ணை நன்றாக அழுத்தவேண்டும்.

நடும் காலம்.—நீர் எளிதில் வடிந்து விடக்கூடிய பகுதிகளில் பருவ மழை காலத்திலும், நீர் எளிதில் வடிவதற்கு வசதியில்லாத பகுதிகளில், பருவ மழை முடியும் காலத்திலும் நடுவது நன்று.

நட்டபின் பராமரிப்பு.—தக்க காலத்தில் நீர் பாசனமும், களையெடுத்தலும், பருவ மழை முடிந்தபின் கன்றுகளையும், மரங்களையும் சுற்றி கொத்தி விடுதலும் மிகவும் முக்கியம். இது மட்டுமன்றி மாரி காலங்களில் நீர் தேங்கியிருக்காதபடி அவ்வப்போது வடித்து விடவேண்டும்.

உரமிடுதல்.—ஒவ்வொரு வருடமும் பருவமழை முடிந்த பின் மரத்திற்கு உரமிடவேண்டும். பலன் தரும் ஒவ்வொரு மரத்திற்கும் 30 ராத்தல் பசுந்தழையோ அல்லது கம்போஸ்ட் உரமோ போடவேண்டும். இத்துடன் ஒரு ராத்தல் இரசாயன உரக் கலவையை (Standard Fertilizer Mixture No. III) போடுவதினால் பலனை அதிகரிப்பதுடன் பாக்கின் தரத்தையும் உயர்த்தலாம். இளங்கன்றுகளுக்கு மேற்கூறிய அளவில் பாதி உரமே தேவைப்படும்.

பயிர் பாதுகாப்பு.—இளங்கன்றுகளை 'மைட்' (Mite) என்னும் ஒருவகை பூச்சிகள் தாக்குகின்றன. இவை இலையின் அடிப்பாகத்தில், முக்கியமாக கோடை காலத்தில் காணப்படும்.

ஒரு அவுன்ஸ் நீரில் கரையும் கந்தகத்தை 2—3 காலன் தண்ணீரில் கலந்து, அதை இலைகளின் அடிப்பாகத்தில் நன்றாக படும்படி தெளித்து இப்பூச்சியை கட்டுப்படுத்தலாம்.

மாரி காலத்தில் இலைகளில் சில புள்ளி நோய்கள் காணப்படும். அவைகளை 1% போர்டோ கலவையை (Bordraux mixture) தெளித்து கட்டுபடுத்தலாம்.

பெரிய மரங்களை தாக்கும் நோய்களுள் "குலை அழுகல் நோயும்" (Mahali) "அடைப்பு காளான் (Anabi or Ganoderma)" நோயும் முக்கியமானவை. "குலை அழுகல்" நோய், பருவ மழை காலத்தில் தோன்றுவதால், இதை தடுப்பதற்கு பருவமழை ஆரம்பிக்கும் முன்பு ஒரு முறையும், பருவமழை காலத்தின் நடுவில் மழை இல்லாத நாட்களில் மற்றொரு முறையும் 1% போர்டோ கலவையை காய்களில் நன்றாக படும்படி தெளிக்கவேண்டும்.

"அடைப்பு காளான்" நோயின் அறிகுறிகள் மரம் பட்டு போனபின் தெரிவதால், பாதிக்கப்பட்ட மரங்களை காப்பாற்ற இயலாது. ஆனால் இது மற்ற மரங்களுக்கு பரவாதபடி தடுக்க, பாதிக்கப்பட்ட மரங்களைச் சுற்றி 1½—2 அடி அகலம் 1½—2 அடி ஆழம் உள்ள குழி தோண்டி அக்குழிகளில் கந்தகத் தூளை தூவி பின் மூடவேண்டும்.



உங்களுடைய பிரச்சினை இதுவா... அல்லது இதுவா?



வெள்ளம் அல்லது வறட்சி,
இந்தப் பிரச்சினையை
திட்டவட்டமாக, திறமையாகத் தீர்க்க



ஜான்ஸ்டன்

வெர்டிகல் பம்புகள்

நம்பிக்கையான ஜான்ஸ்டன் வெர்டிகல் பம்புகள் வாடிக்கைக்காரர்கள் கேட்கும் அளவுப்படி தயாரிக்கப்படுகின்றன. எளிதில் மாற்றிக்கொள்ளக்கூடிய உறுப்புகளுடன் பல்வேறு அளவுகளில் கிடைக்கின்றன. உங்கள் பிரச்சினை எதுவாக இருந்தாலும் ஜான்ஸ்டன் அதைத் தீர்க்கும்.

GROUP OF MACNEILL & BARRY LTD. COMPANIES

மேலும் விவரங்களுக்கு எழுதுங்கள் :

ஜான்ஸ்டன் பம்ப்ஸ் இந்தியா லிமிடெட்
2. போலி பிளேஸ், கல்கத்தா-1

JOHNSTON TURBINE PUMPS

JPI/3A TAM

நெற்பயிரில் "ஆனைக் கொம்பு"

(P. R. நாகராஜராவ், G. வரதராஜன் and B. வேலாயுதம், நெற்பயிர் பூச்சி ஆராய்ச்சி அலுவலகம், ஆடுதுறை.)

தஞ்சை மாவட்டத்தில், தாளடி வயல்களில், நெற்பயிர் இளம் பயிராக இருக்கும் போது சுமார் 30 நாட்களி லிருந்து 60 நாட்கள் வரை, பயிரில் கொம்புபோன்ற தூறுகள் காணப்படும். ஒரு குறிப்பிட்ட தூறு (Tiller) அவ்வாறுக மாறிவிடும். இதனுல் அந்த தூறில் விளைய வேண்டிய நெற்கதிர் ஒன்று இழக்கப்படுகிறது. ஒரு நெற் பயிரில் இது போன்ற "கொம்புகள்" இரண்டு மூன்று கூட காணப்படுகின்றன.

இக் கொம்புகள், குழாய் போன்ற அமைப்பு உடையதாக இருக்கும் (Tubular structure). சாதாரணமாக வெண்மை நிறத்தில் காணப்படும். சில நெல் ரகஙகளில் பச்சை நிற மாகவும், ஊதா நிறமாகவும் காணப்படுகின்றன. உதாரண மாக கோ. 30-ல் ஊதா நிறமான கொம்புகளைக் காணலாம். இக் கொம்புகள் பசசை நிறத்தில் காணப் படும்போது, இதன் தோற்றத்தைக் கண்டுபிடிப்பது சிறிது கடினம்.

இவ்வித கொம்புகள், ஏற்படுவதற்குக் காரணம் ஒரு வகை 'ஈயே'யாகும் (இதை ஆங்கிலத்தில் Gall fly என்று கூறுவர்). இந்த ஈக்கள் மிகவும் சிறியனவாகவும், கால்கள் மட்டும் நீண்டனவாகவும் காணப்படும். இந்த ஈக்கள், நெற் பயிரின் அடிப் பாகத்தில் முட்டைகள் இடுகின்றன. முட்டையி லிருந்து வெளிவந்த புழுக்கள் (Maggot) பயிரின் தூறினைத் துளைத்துக் கொண்டு உள்ளே செல்கின்றன. உள்ளேசென்று நடுக்குருத்து ஏற்படும் இடத்தில் தின்ன ஆரம்பிக்கின்றன. அங்ஙனம் நடுக் குருத்தை கிளம்பும் இடத்திலேயே சாப்பிடப்பட்டு விடுவதால், வெளிப்புறத்தில் உள்ள பகுதி மட்டும் வளருகிறது. ஆதலால் குழாய் போன்ற அமைப்பில் ஒரு தூறு காணப்படுகிறது. இதைத் தமிழக விவசாயிகள், "ஆனைக்கொம்பு" (Pachy diplosis oryzae N.) என்று பண்டு தொட்டே கூறலாயினர்.

இதன் தோற்றமும், செய்யும் சேதமும் நெல் வகையைப் பொருத்துள்ளது. ஆதலின் தாளடியில் விளையக்கூடிய ADT 1, ADT 2, ADT 8, ADT25, CO 30, PTB 15, ஆகிய ஆறுவகை நெல் ரகங்களை, எடுத்துக்கொண்டு, பாரத்தியான் (Folidol : E. 605) உள்ள பாலிடாலைக் கொண்டு, ஒரு சோதனை செய்யப்பட்டது. (ஒரு அவுன்ஸ் பாலிடால் 12½ காலன் தண்ணீரில் கலந்த திரவம்) மருந்தடிப்பதற்கு முன்னும், மருந்தடித்த பத்து நாட்களுக்குப் பின்னும் ஆனைக் கொம்பின் தோற்றம் கணக்கு எடுக்கப்பட்டது.

பாலிடால் 0·25 சதவீதம் அடித்தபின், பூச்சி மிகுந்த அளவில் குறைந்திருந்தது. கோ. 30-ல் அதிக அளவு பூச்சி தாக்குகிறது. அடுத்து, ADT 25-லும், PTB 15-லும் காணப்படுகின்றன. மற்ற எல்லா ரகங்களிலும் ஆனைக் கொம்பு அதிக அளவில் காணப்படவில்லை. மேலும், ADT 8-ல், மருந்தடிப்பதற்கு முன்னும், குறைந்த அளவே காணப்படுகிறது. எனினும் ஆனைக்கொம்பு தாக்குதலால், குறிப்பிட்ட தூறே வீணுவதால், கட்டாயம் விளைவும் பாதிக்கப்படும்.

ஆனைக் கொம்புகள் ஒன்று இரண்டு தெரிந்தால்கூட உடனே, பாலிடாலை (ஒரு அவுன்ஸ் 12½ காலன் தண்ணீரில் கலந்து) அடிக்க வேண்டும். ஏனெனில், அதிக அளவு கண்ட பிறகு அடிப்பதில் பயன் கிட்டாது. மேலும் இப் பூச்சியின் புழுக்கள் உள்ளே சென்றதும், இதன் இயற்கை விரோதியான ஒரு வித குளவி தாக்கி விடு கிறது. அதனுல் "ஆனைக் கொம்புகள்" காணப்படுவ தில்லை. ஆயினும் புழுக்களால் தாக்கப்பட்ட தூறு அழிந்து விடுகிறது. ஒரு நெற்கதிர் கிடைப்பதில்லை. மருந்தடிப்பதற்கு முன் வயலில் கூடிய மட்டும் தண்ணீரை வடி கட்ட வேண்டும். மேலும் மருந்தை பயிரின் அடிப் பாகத்தில் நன்கு படும்படி அடிக்கவேண்டும். ஏனெனில் இப் பூச்சிகள் முட்டைகளை பயிரின் அடிப்பாகத்தில்தான் இடுகின்றன.

தாளடியில் கோ. 30 பயிரிடுவோர், இரண்டாவது தடவை யும் மேற்சொன்ன முறையில் மருந்தடிக்கவேண்டும். முதல் தடவைக்கும் இரண்டாவது தடவைக்கும் 10 நாள் இடைவெளி இருந்தால் நல்லது.

இப் பூச்சி பெரும்பாலும் நவம்பர், டிசம்பர் மாதங் களில்தான், தாளடிப்பயிர்களில் தஞ்சை மாவட்டத்தில் காணப்படுகிறது. மற்ற காலங்களில் சில வகை புற்களில் காணப்படுகின்றன. ஆதலின் மருந்தடிக்கும்போது அண்மையில் உள்ள வரப்புகளிலும் அடித்தால் நல்லது. அவ்வாறு மருந்தடிக்கப்பட்ட புல்லை அறுத்து கால்நடை களுக்கு தீவனமாக பயன் படுத்தக்கூடாது.

பொதுவாக தஞ்சை விவசாயிகள் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் விழிப்பாகப் பயிர்களைக் காக்க வேண்டும். ஏனெனில் இம் மாதங்களில் நெற்பயிருக்கு, எலி, குருத்துப் பூச்சி, ஆனைக்கொம்பு, புகையான் இதர தத்துப் பூச்சிகளும், சூரைப் பூச்சிகளும் தீங்கு செய் கின்றன. இப்பொழுதுள்ள தேச நெருக்கடியில், ஒரு நெற்கதிரை அதிகமாக விளைவித்தால்கூட, அது தேசத் துக்குச் செய்யும் பெருந்தொண்டாகும்.

வைட்டமின் தேவைக்கு மேற்கு இந்திய செரி

கரும்பின் நோய்களும் தடுப்பு முறைகளும்

[ந. ஜலீல் அஹமது, பி.ஏ., பி.எஸ்ஸி., ரா. பெருமாள் ராஜா, பி. எஸ்ஸி. (ஏஜி.,)
(மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலயம், கடலூர்).]

கரும்பில் காணும் முக்கிய நோய்களும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்—

1. **கரிப்பூட்டை நோய்.**—இந்த நோய் ஒருவகை பூஞ்சணத்தால் உண்டாகிறது. இதனல் தாக்கப்பட்ட கரும்பின் குருத்து, நீண்டு வளைந்த கருஞ்சாட்டை போன்று வளர்வதைப் பார்க்கலாம். இவ்வாறு குருத்தின் வளர்ச்சி தடைப்படுவதால் மகசூல் பெரிதும் பாதிக்கப்படுகிறது. நோய் தாக்கிய கரும்புகள் சாதாரணமாக மற்ற ஆரோக்கியமான கரும்புகளைவிட, கனத்தில் குறைந்து சன்னமாக மெலிந்து வளர்வதை எளிதில் கண்டு கொள்ளலாம். இந்நோய் முக்கியமாக கோ. 419 எனும் ரகத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. இதன் தாக்குதல் நடவுக் கரும்பில் குறைவு. முதல் கட்டைப் பயிர் விடும்போது அதில் 10—20 சதம் வரை பெருகிவிடுகிறது. சில சமயங்களில் வெல்லத்தின் விலை கூடுதலாக இருப்பின் விவசாயிகள் மேற்கொண்டு கட்டைப்பயிர் விடுகிறார்கள். இதனல் நோய் அதிகமான அளவில் பெருகி மகசூலைப் பெரிதும் குறைப்பதுடன் மற்ற வயல்களுக்கும் பரவுவதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகவே எக்காரணத்தை முன்னிட்டும் ஒரு கட்டைப் பயிருக்குமேல் விடுவதை அறவே நிறுத்திக் கொள்ளவேண்டும்.

தடுப்பு முறைகள்.

(1) நோய் தாக்கிய கரும்புகளிலிருந்து நடுவதற்குக் கரணைகளை எடுப்பது கூடாது. அவற்றை அறவே நீக்குதல் நல்லது.

(2) வயல்களில் அவ்வப்போது தென்படும் "கருஞ்சாட்டைகளை" உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும். அதாவது கருஞ்சாட்டையிலிருக்கும் நுண்ணிய பூஞ்சண அணுக்கள் கீழே விழுந்து தண்ணீர் மூலமாகவோ காற்றின் மூலமாகவோ மேலும் பரவாமல் தடுக்க அவற்றை கோணிப்பைகளில் புகுத்தி வெட்டி எடுத்துக் கொதி நீரில் அமிழ்த்தியோ, குழியில் போட்டு எரித்தோ அழித்து விடவேண்டும்.

(3) நோய் அதிகமாகத் தாக்கிய வயல்களில் தகுந்த மாற்றுப் பயிர் செய்தல் சாலச் சிறந்தது.

(4) கூடிய மட்டும் கட்டைப் பயிர் விடுவதை நிறுத்திக் கொள்வதால் மேலும் அதிகரிக்காமல் தடுக்கலாம்.

(5) நோய் தாக்கப்படாத கரும்புகளான கோ. 449, கோ. 658 ஆகியவற்றைப் பயிர் செய்தல் நல்லது.

2. **கரணை அழுகல் நோய்.**—இதுவும் ஓர் பூஞ்சண நோயாகும். இது முக்கியமாக நட்ட கரணைகளைத் தாக்கி முளைப்பைப் பாதிப்பதால் கரும்பின் மகசூல் குறைகிறது. நோய் தாக்கிய கரணைகளைப் பிளந்து பார்த்தால் அன்னசிப் பழ வாசனை வரும். எனவே, இதனை "அன்னசிப் பழநோய்" எனவும் அழைப்பதுணடு. இந்த நோயை உண்டாக்கும் பூஞ்சணம் நடுகின்ற கரணைகளின் வெட்டுவாய் மூலமாகப் புகுந்து கரணையின் மென்மையான மத்திய பாகத்தில் வளர்ந்து கரும்பின் முளைப்பைத் தடுத்து விடுகிறது. நீர் தேங்கக் கூடிய இடங்களில் இது அதிகமாகப் பரவுகிறது.

கரணைகளின் வெட்டுவாயை அரிடான், அகலால் போன்ற மருந்துகளில் துவைத்து நடவேண்டும். இவ்வாறு செய்வதால் நோயைத் தடுப்பதுடன், முளைப்பையும் அதிகரிக்கச் செய்யலாம்.

எக்கருக்கு 4 முதல் 6 அவுன்ஸ் அரிடான் அல்லது 8 முதல் 12 அவுன்ஸ் அகலால் மருந்து போதுமானது. 1 அவுன்ஸ் அரிடான் அல்லது 2 அவுன்ஸ் அகலாலை $2\frac{1}{2}$ காலன் தண்ணீரில் கரைக்கவேண்டும். ஒரு எக்கருக்கு தேவையான நடவுக் கரணைகளைத் துவைப்பதற்கு ரூபாய் 5 தான் ஆகிறது.

3. **மஞ்சள் புள்ளி நோய்**—இந்த நோய் பொதுவாக மழைக் காலத்தின் பின்பாதியில் தென்பட்டு மழை குறையும் பொழுது குறைய ஆரம்பிக்கின்றது. முதல் ஆறு மாதங்கள் வரை பயிரை அதிகமாகத் தாக்குவதில்லை கரும்பின் முதிர்ந்த இலைகளை அதிகமாகத் தாக்குகிறது. இது சிறிய மஞ்சள் நிறப்புள்ளியாகத் தோன்றி, பெரிதாகி சிவப்பு நிறமடைந்து, விரிந்து இலை பூராவும் பரவி இலைகள் காய்ந்துவிடுகிறது. இளங்குருத்தையும் வளர விடுவதில்லை. சர்க்கரைச் சத்தும் குறைந்து விடுகின்றது.

தடுப்பு முறைகள்

(1) நோய் பரவ, மழை ஏதுவாக இருப்பதால் நோய் வராமல் தடுக்க மழைக்கு முன்பு போர்டோ கலவை, குப்ராவிட், போன்ற மருந்துகளை 15 நாட்களுக்கொரு முறை பயிர்களின்மேல் மூன்று தடவைகள் தெளிக்க வேண்டும்.

(2) நோயால் பாதிக்கப்படாத கோ. 449 போன்ற கரும்பு ரகத்தைப் பயிரிட வேண்டும்.

கீரைகளில் சிறந்தது தவசிக்கீரை

வெற்றிலைக் கொடியின் வாடல் நோயும் தடுப்பு முறைகளும்

(ஏ. வெங்கட்ராவ், கே. எஸ். சுப்பிரமணியன், சி.எஸ். கிருஷ்ணமூர்த்தி, பூசணப் பிரிவு.)

வெற்றிலைக் கொடி தமிழ் நாட்டில் முக்கியமாக சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. சேலம், திருச்சி முதலிய மாவட்டங்களில் சில வருடங்களாக இதனை ஒரு "வாடல் நோய்" (Wilt) தாக்கி வருகிறது. இந்த நோயைப்பற்றி ஆராய்ந்து சிறந்த முறையில் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக சேலம் மாவட்டத்தில் பொத்தனூர் என்னும் கிராமத்தில் அரசினர் ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று ஏற்படுத்தப்பட்டு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நோய் "பைடாப்தோரா" (Phytophthora sp) என்னும் பூசணத்தால் ஏற்படுகின்றது.

நோயின் அறிகுறிகள்

* இந்தப் பூசணம் வெற்றிலைக் கொடியை எந்த நிலையிலும் தாக்கக் கூடும்.

வாடிய கொடி.

* தாக்கப்பட்ட கொடி முதலில் தனது இயற்கையான பளபளப்புத் தன்மையை இழக்கிறது.

* பிறகு இலைகள் சிறிது சிறிதாக வாட ஆரம்பித்துப் பசுமை நிறத்தையும் இழக்கின்றது.

* கிளைகளும் இதே மாதிரி வாட ஆரம்பிக்கின்றன.

* தண்டுகள் சிறிது சிறிதாகச் சுருங்கி கடைசியில் உலர்ந்த குச்சிபோல் ஆகிவிடுகின்றன.

* தரைக்கு மேல் கொஞ்சம் உயரம் வளர தண்டுகளும் பழுப்பு நிறமாக மாறிவிடுகின்றது.

* வாடிய அல்லது வாட ஆரம்பிக்கும் கொடியைப் பிடுங்கிப் பார்த்தால் தரைக்குக் கீழுள்ள பாகங்கள் நன்றாக அழுகி ஒருவித துர்நாற்றத்தையும் வெளிப்படுத்துகின்றது; அப்பாகங்கள் நூல் நூலாகப் பிரிந்தும் காணப்படும். இயற்கையாக உள்ள கெட்டித் தன்மை இருக்காது.

* வாட ஆரம்பிக்கும் முதல் அறிகுறி காணப்படுவதிலிருந்து ஒரு வாரத்திற்குள் கொடி நன்கு வாடி உலர்ந்துவிடுகின்றது.

பூசணம்

இந்தப் பூசணமானது தாக்கப்பட்ட பயிர் இருந்த இடங்களில் மண்ணில் காணப்படும். இந்த இடங்களில் மறுபடியும் வெற்றிலைக் கொடி பயிரிடும்போது பூசணம் வளர்ச்சியடைந்து கொடியின் கீழ்பாகம் மூலம் உள்ளே சென்று பரவி கொடியை வாடச் செய்கின்றது. பூசணம் நன்கு வளரும்போது "ஸ்போராஞ்சியா" (Sporangia) என்று சொல்லக்கூடிய இந்தப் பூசணத்தின் வித்துக்கள் அதிக அளவில் உண்டாகின்றன. இவை கொடியைத் தாக்கி வளர்ச்சியுற்றுப் பின் சேதத்தை விளைவிக்கின்றன.

பரவும் விதம்

இந்தப் பூசணத்தின் வித்துக்கள் தண்ணீரின் மூலமாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பரவும். தாக்கப்பட்ட கொடியிலிருந்து பூசணம் வளர்ந்து பக்கத்திலுள்ள கொடிக்கும் பரவக்கூடும். தாக்கப்பட்ட நிலங்களிலிருந்து கொடியை அறுத்து எடுத்துக் கொண்டு போகும்போது தற்செயலாக தாக்கப்பட்ட கொடியின் பாகங்களோ மண்ணோ படும்போது கொடிகளின் மூலமும் புது இடங்களுக்கு இந்த நோய் பரவக்கூடும்.

குளிர் சீதோஷ்ண நிலையிலும், மழை காலங்களிலும் இந்த நோயின் கொடுமை அதிகமாகக் காணப்படுகின்றது. வெயில் காலங்களில் அதிகமாகக் காணப்படுவதில்லை.

தடுப்பு முறைகள்

(1) கொடி நடுவதற்கு முன்பு பட்டத்திலுள்ள மண்ணை ஒரு சத போர்டோக் கலவையால் நன்கு நனைக்கவேண்டும். பின்பு கொடிகளையும் அந்தக் கலவையில் நனைத்து விட்டு நடவேண்டும்.

(4) நோய் உள்ள நிலத்தில் தொழு உரம் போடுவதால் வாடல் நோய் அதிகரிப்பதால் அந்த மாதிரி நிலங்களில் தொழு உரத்தைக் குறைந்த அளவில் உபயோகிப்பது நலம்.

மருந்து நனைக்கப்படாத கொடி.

மருந்து நனைக்கப்பட்ட கொடி.

(2) மாதம் ஒருமுறை தவறுமல் போர்டோ கலவையை பயிரின் கீழ் மண்ணில் ஊற்றி நனைத்தல் வேண்டும்.

(3) நோய்பட்ட கொடிகளை அவ்வப்போது பிடுங்கி, தீயிலிட்டு எரித்துவிடவேண்டும்.

(5) நோய் ஆரம்பித்த பின்பு மருந்து உபயோகிப்பதால் பலன் உடன் கிட்டாது. முறையாகக் கொடி நட ஆரம்பித்ததிலிருந்து மருந்தை உபயோகப்படுத்த வேண்டும்.

வாடல் நோய் உள்ள இடங்களில் விவசாயிகள் மேற் கூறப்பட்ட தடுப்பு முறைகளை கிரமப்படி கடைப்பிடித்துப் பலனடையவும்.

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விவரம்.

கிடைக்குமிடம்.	கிடைக்கும் காலம்.	கையிருப்பு. எண்ணிக்கை.	ஒன்றின் விலை. ரூ. நபை.
தென்னை நாற்றங்கால் சேலம், சேலம் ஜில்லா,	செப்டம்பர் மாதம்	1,000	0.65
தென்னை நாற்றங்கால், குடியாத்தம், வடாற்காடு ஜில்லா.	செப்டம்பர் மாதம்	10,000	0·65

தமிழ்நாட்டில் மின்சார முன்னேற்றம்

1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி தமிழ்நாட்டில் மின்சார வசதிப் பெற்றிருந்த நகரங்கள், கிராமங்களின் மொத்த எண்ணிக்கை 15,053 ; மின்சாரத்தால் இயங்கும் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 168,018.

(செய்தி—தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறை)

கவலையுராதீர்—நிலக்கடலைக்கு ஸ்பாட் லோன் இருக்கிறது

முன்னேற்ற விவசாயப் பயிற்சிக்கு ஓர் வாய்ப்பு

[சி. என். ராமதுரை, பி. எஸ்ஸி. (விவ.), டி.எச்.]

நவீன விவசாய முறைகளைக் கடைப்பிடித்து விவசாயிகள் முன்னேறவேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ் நாட்டில் விவசாயப் பள்ளிகள் பல ஏற்படுத்தப்பட்டுள் ளன. இவற்றில் ஒன்று கோவை மாவட்ட விவசாயிகளுக்கென பவானிசாகரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது இங்குள்ள அரசினர் விவசாய நிலையத்துடன் இணைக்கப் பட்டிருப்பதால் தனிச்சிறப்புடையது. பவானிசாகர் மேட்டுப் பாளையத்திலிருந்து சத்தியமங்கலம் செல்லும் சாலையில் இருபது மைல் தூரத்தில் உள்ளது. இவ்விடத்தில் கிராம விஸ்தரிப்பு நிலையம், அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி, வட்டார வளர்ச்சி அதிகாரிகள் பயிற்சி நிலயம், பஞ்சாயத்து யூனியன் அலுவலகம், முதலிய கிராம சீரமைப்புத் திட்டங்கள் கொண்ட நிலையங்கள் இருக்கின் றன. ஆகவே, பல கிராமங்களிலிருந்து வந்துள்ள மாண வர்கள் சேர்ந்து பழகி தங்கள் கருத்துக்களைத் தெரிவித் துக்கொண்டு முன்னேற்றமடைய வசதியுண்டு.

விவசாயப் பள்ளியில் ஒவ்வொரு வருடமும் இருபது மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. நவீன விவசாய முறைகளை சிரமம் இல்லாமல் கற்றுக்கொண்டு சொந்த முயற்சியைக் கொண்டு விவசாயிகளை முன் னேறச் செய்வதே இப்பள்ளியின் தலையாய நோக்க மாகும். அரசாங்கத்தில் வேலை கொடுப்பது இதன் நோக்கமல்ல. பயிற்சி காலம் ஜூலை 1-ம் தேதிமுதல் மறுவருடம் ஜூன் 30-ந் தேதி வரையாகும். இப் பயிற்சிக்கு விவசாய அனுபவமுள்ள இளம் விவசாயிகளே தகுதியுடையவர்களாவார்கள். விண்ணப்பங்கள் பஞ்சா யத்து யூனியன் கமிஷனர் மூலமாக சிபாரிசு செய்து அனுப்பப்பட வேண்டும். மாணவர்களுக்கு இலவச உணவுக்குப் பதிலாக மாதம் 35 ரூபாய் உதவித் தொகையும், கைப்பணமாக ரூபாய் 5-ந்தும் தரப்படு கிறது. மற்றும் ஜாகை வசதி, தண்ணீர் வசதி, மின் சாரம், வாசகசாலை, விளையாட்டு வசதிகள் யாவும் இலவச மாக அளிக்கப்படுகின்றன. பயிற்சிக் காலத்தில் மாண வர்கள் தமிழ் நாட்டில் உள்ள விவசாய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இதற்காக அரசாங்கம் ஒவ்வொரு மாணவருக்கும் ரூபாய் 100 வீதம் வழங்குகின்றது. பயிற்சி முடிந்ததும் விஞ்ஞான சாகுபடி முறைகளை அறிவதற்கும், நவீன விவசாயக் கருவிகளைக் கையாளவும் மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப் போதிய வசதிகள் இப்பண்ணையில் அமைந்திருக்கின்றன. பயிற்சியாளருக்கு விவசாயத் துறை நெறியாளரிடமிருந்து நற்சான்றிதழ்கள் வழங்கப் படுகின்றன. பயிற்சி பெற்ற மாணவ விவசாயிகளுடைய சேவையை நன்கு பயன்படுத்துமாறு பஞ்சாயத்து யூனி யன் கமிஷனர்களுக்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.

இப் பயிற்சியாளர்கள் கிராமசகாயக்குகளாக தொண்டு செய்ய வாய்ப்புள்ளது. நல்ல விதைகளை அபிவிருத்தி செய்து அவற்றை விவசாயிகளுக்கு விநியோகிப்பதே கிராம சகாயக்குகளின் தலையாய கடமையாகும். மேலும் பயிற்சிபெற்ற விவசாயிகள் நவீன விவசாய முறைகளை கடைப்பிடிக்கும்போது மற்ற விவசாயிகளும் இதைப் பார்த்து தெரிந்துகொள்ள வாய்ப்புண்டு. இப் பள்ளியில் கால்நடை பராமரிப்பு, பால்பண்ணை நிர்வாகம், கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்ற எல்லாத் தொழில்களிலும் அளிக்கப்படும் பயிற்சி விவசாயிகளுக்குப் பல வழிகளிலும் பயன்தரும்.

இதுபோன்ற பள்ளிகள் இன்னும் பல மாவட்டங்களி லும் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன.

பள்ளியிருக்குமிடம்.	மாவட்டம்.
(1) காஞ்சீபுரம்	செங்கல்பட்டு
(2) காட்பாடி	வட ஆற்காடு
(3) காக்குப்பம்	தென் ஆற்காடு
(4) பாப்பாரப்பட்டி	சேலம்
(5) சாக்கோட்டை	தஞ்சாவூர்
(6) பரமக்குடி	இராமநாதபுரம்
(7) காரையிருப்பு	திருநெல்வேலி
(8) ஊட்டி	நீலகிரி
(9) திருவரங்குளம்	திருச்சி
(10) ஓலக்கோட்	கன்னியாகுமரி.

தமிழ்நாட்டு இளம் விவசாயிகள் அனைவரும் இப்பள்ளி களில் சேர்ந்து தாம் கற்றுணர்ந்தவற்றை மற்றவர்களுக் கும் நன்மை பயக்கும்படி செய்து உதவவேண்டும்.

ஒரு ஏக்கரில் உருளைக்கிழங்கு விளைச்சல் 65,120 ராத்தல்!!

உதகமண்டல உருளைக்கிழங்கு விளைச்சல் போட்டியின் முடிவு.

1963-ம் ஆண்டு இறைவை உருளைக்கிழங்கு பயிர் விளைச் சல் போட்டியில் ஏக்கருக்கு 65,120 ராத்தல் (29,538 கி. கி.) உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்பட்டது. இது ஒரு புதிய சாதனையாகும். இதனை விளைவித்தவர் உதகையைச் சேர்ந்த காக்காதோப்பில் உள்ள திரு. கே. பொன்னன்.

இவ்வட்டாரத்தில் உருளைக்கிழங்கின் சராசரி விளைச்சல் ஆறு முதல் எட்டு மெட்ரிக் டன்களே (6,000 முதல் 8,000 கி.கி.).

கடந்த ஆண்டு போட்டியில் அதிகப்படி விளைச்சல் ஏக்க ருக்கு 41,000 ராத்தல். இதுவரை நடத்திய பயிர் விளைச் சல் போட்டிகளில் தற்பொழுது கிடைத்திருக்கும் 65,120 ராத்தலே முதன்மையானது.



உள்ளமைந்த கேம்பர்
மற்றும் உயர்ந்த
இடைவெளியுடன் கூடிய
வால்டாஸ் மாட்டு வண்டியின்
சுமையற்ற மற்றும்
சுமையேற்றிய நிலேகளே
வரைபடங்கள் காட்டுகின்றன

VOLTAS வால்டாஸ் 2-டன் மாட்டுவண்டி

இருமடங்கு பாரத்தை பிரயாசையின்றி மிக எளிதாக ஏற்றிச் செல்லுகிறது

இந்தியாவிலேயே மிகச் சிறந்த நவீன விவசாய இயந்திரக்கருவித் தயாரிப்பாளர்களான வால்டாஸ் ஸ்தாபனம் இந்தியாவின் மிகப் பழைய போக்குவரத்து சாதனமாகிய மாட்டு வண்டியை நம் இந்திய விவசாயிகளுக்கு ஏற்ப மிக நவீன முறையில் தயாரித்து அளிக்கிறது.

இந்த வால்டாஸ் 2 டன் மாட்டுவண்டி விவசாயப்பண்ணே சம்பந்தப்பட்ட எல்லா வேலேகளுக்கும் ஏற்றவாறு வால்டாஸ் ஸ்தாபனத்தின் நிபுணர்களால் பரிசீலிக்கப்பட்டு நன்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

- வால்டாஸ் மாட்டு வண்டியில் காற்றடைக்கப்பட்ட ரப்பர் டயர் சக்கரங்கள் பொருத்தப்பட்டிருப்பதால் மாடுகள் சிறிதும் சிரமமின்றி எளிதாக சுமைகளே இழுக்கின்றன ஆகவே சாதாரண வண்டிப்பாரத்தைவிட அதிக பாரத்தை ஏற்ற முடிகிறது.
- வால்டாஸ் 2 டன் மாட்டு வண்டியின் பிரேம்கள் (உடலமைப்பு) மிக உறுதியான அழுத்தப்பட்ட எஃகுச் சட்டங்களினல் அமைக்கப்பட்டிருக்கிறது. இது மரத்தைவிட கனம் குறைவானது. அனுவசியமான அதிகப்படி பாரத்தைக் குறைக்கிறது. வால்டாஸ் 2 டன் மாட்டு வண்டி ஒன்றுதான் சாதாரண மாட்டு வண்டியின் பாரத்தைப் போல சரியாக இரு மடங்கு பாரத்தைக் குறைக்கிறது.
- வண்டியில் உயர்ந்த வில் (26" இடை வெளியுள்ளது.) அமைக்கப்பட்டிருப்பதால் கரடுமுரடான நாட்டுப்புறப் பாதைகளிலும், தடங்களிலும், வயல் வெளிகளிலும் சுலபமாக வண்டியைச் செலுத்திச் செல்லமுடிகிறது.
- உள்ளமைந்த கேம்பர் வண்டியின் பாரத்திற்கும் பாதையின் மேடுபள்ள நிலேக்கும் தக்கவாறு தாமாகவே இயங்கி சக்கரங்களே சம நிலேப்படுத்துகிறது சக்கரங்கள் தடங்கலின்றி சுலபமாக உருளுகின்றன குலுக்கல்களும்—ஆட்டங்களும் தவிர்க்கப்படுகின்றன. உங்கள் விலேயுயர்ந்த மாடுகளின் கழுத்து புண்ணுவது தவிர்க்கப்படுகின்றன.

வால்டாஸ் 2 டன் மாட்டு வண்டி - ஒவ்வொரு விவசாயியும் மிக விரும்பித் தேர்ந்தெடுக்கப்படும் வண்டி.—,

VOLTAS

வால்டாஸ் லிமிடெட்
விவசாய இயந்திரப்பகுதி
கிஞ்சபோக்லி ரோடு, பம்பாய்—33

கல்கத்தா • புது டெல்லி • சென்னே • பெங்களூர் • கொச்சி
ஆமதாபாத் • செகந்தராபாத் • போபால் • நாக்பூர் • பாட்னு
கோயமுத்தூர் • மதுரை.

VOL 633 TAM EVEREST

விவசாயச் செய்திக் கதிர்

திரு. எம். காசிவிஸ்வநாதன், டி. ரகோத்தம ராவ், விரிவினைப் பிரிவு, கோவை.

"ஆடிப்பட்டம் தேடி விதை என்ற பழமொழி நாம் அறிந்ததேயாகும். ஆடி மாதம் பதினெட்டாம் நாள் விவசாயிகளின் உள்ளங்களில் பொறுக்கு விதையை உபயோகிக்கும் மனப்பான்மையைப் புகுத்துவதற்காக தமிழ்நாடெங்கும் 'விதை தின விழா' கொண்டாடப்பட்டது. பயிர் விதைப்பில் பொறுக்கு விதைகளை உபயோகிப்பதைத் தவிர தேவையான அளவு விதைகளை விதைத்தல், உற்ற பருவத்தில் விதைகளுக்கிடையே தேவையான இடை வெளிவிட்டு விதைத்தல், விதை மூலம் பரவும் வியாதிகளைத் தடுக்க விதைகளுடன் தக்க மருந்து கலக்கிப் பின் விதைத்தல், பயறுவகை விதைகளுக்குப் பாக்டீரியா கூட்டு ஊட்டல் ஆகியவற்றையும் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும்.

சமீபத்தில் நெல்லில் ஏ. டி. டீ. 26, பி. வி. ஆர். 1. கோவை. 31 ரகங்களும், சோளத்தில் கோ. 20 என்ற ரகம் வெளியிடப்பட்டிருக்கின்றன.

சிறந்த ஆமணக்கு ரகங்களைப் பயிரிடுங்கள்.

முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒன்ருன ஆமணக்கில், டி. எம். வி1, டி. எம். வி. 2, டி. எம். வி. 3 என்ற மூன்று பொறுக்கு ரகங்களும், கோ. 1 என்ற பல வருடப் பயிரும் உள்ளன.

டி. எம். வி. 3

* டி. எம். வி. 3 ரகம் சேலம், செங்கல்பட்டு, தென்ஞற்காடு, தஞ்சை மாவட்டங்களிலும், திருநெல்வேலி, வடஆற்காடு மாவட்டங்களில் சில பகுதிகளிலும் சாகுபடி செய்வதற்கேற்றது.

* ஜூலை-ஆகஸ்டு மாதங்களில் இதை விதைக்கலாம்.

* செடி ஆறு முதல் எட்டு அடி உயரம் வரை வளரும்.

* காய்க்கொத்தில் அடர்த்தியாகயின்றிப் பரவலாக உள்ளன்.

* இதன் காய்கள் மேற்புரத்தில் முள்போன்ற பாகங்களைக் கொண்டது.

வெடிக்கும் தன்மையை உடையன.

* விதைகள் சிவப்பும், செம்பழுப்பு நிறமும் உடையவை.

* எட்டு மாதத்தில் ஏக்கருக்கு 350 கிலோகிராம் முத்து பெறலாம்.

* கலப்புப் பயிராக ஏக்கருக்கு 170 கிலோகிராம் மகசூல் அளிக்கிறது.

* எண்ணெய்ச்சத்து 55 சதவீதம்.

* பிப்ரவரி-மார்ச் மாதங்களில், மிளகாய், மஞ்சள், வாழைத்தோட்டங்களில் வரப்போரப் பயிராக சாகுபடி செய்வதற்கேற்றது.

கோ. 1. ரகம்.

* 10—12 ஆண்டுகள் வரை தொடர்ந்து வளரும் ரகம்.

* குளிர்ந்த மேட்டுப் பிரதேசங்களிலேதான் வளரும்.

* நிழலுக்காகவும், சாலையோரங்களிலும் வளர்ப்பதற்கு ஏற்றது.

* விதைக்கும் காலம் ஜூலை—ஆகஸ்டு.

* செடிக்கு 1—2 கிலோ கிராம் முத்து கிடைக்கும்.

* எண்ணெய்ச்சத்து 59 சதவீதம்.

* வெயில் காலத்தில் நீர்ப்பாய்ச்சவேண்டும்.

* காய்கள் குட்டையானது.

* காய்க்கொத்தில் பரவலாக உள்ளது.

* செம்பழுப்பு நிறம் சேர்ந்த வெண்மையானது.

* விதைகள் பெரிது.

* பச்சைப் புழுவின் தாக்குதலை எதிர்க்கும் தன்மையுடையது.

காய்கறியில் உற்பத்திப் பெருக்கம்

காய்கறி உற்பத்தியைப் பெருக்கவேண்டியதின் அவசியத்தை உணர்ந்தே அரசாங்கம், சென்னை, திருச்சி, கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் காய்கறி உற்பத்தியைப் பெருக்க பிரத்யேகமான ஒரு திட்டத்தை இயக்கிவருவது தெரிந்ததே. இத்திட்டத்தின் கீழ் காய்கறி சாகுபடியாளர்களுக்கு விதைகள், உரம், பூச்சி பூசண மருந்துகள் ஆகியவை பாதி விலைக்குக் கொடுக்கப் படுவதோடு காய்கறி சாகுபடிக்குத் தேவையான ஆலோசனைகளும் அளிக்கப்படுகின்றன.

நியூ ஈரா (   ) தட்டைப் பயிறு

* காய்கறியாகவும, பயறுக்காகவும் சாகுபடி செய்யலாம்.

* 90 நாட்களில் 1500 கிலோ காய்கறி மகசூல் அளிக்கிறது.

* மானாவாரிப் பயிராகவும், பாசனப் பயிராகவும் சாகுபடிக்கு ஏற்றது.

* விதைத்த 45–வது நாளிலிருந்து காய் பறிக்க ஆரம்பிக்கலாம்.

* பயறுக்காக வளர்த்தால் 75–வது நாளிலிருந்து அறுவடை துவங்கலாம்.

* இதன் காய்கள் நன்கு பருத்தும், பசுமை நிறமுடையதாயும், கொத்தாகவும் காணப்படும்.

* ஒரு செடியில் சுமார் ஒன்பது காய்கள் இருக்கும்.

* விதைகள் பெரியனவாயும் இளம் பழுப்பு நிறமுடையனவாயும் இருக்கும்.

தக்காளியின் பழம் துளைக்கும் புழு.

இப்புழு தக்காளிப் பழத்தைத் துளைத்து உட்புறத்திலுள்ள சதையைத் தின்று சேதம் விளைவிக்கிறது. தாக்கப்பட்ட பழங்களின் தரமும், விலை மதிப்பும் குறைந்து விடுகின்றன. இப்புழு ஆண்டு முழுவதும் தக்காளியைத் தாக்குகிறது.

* அதிகம் தாக்கப்படாத ரகங்கள் பூசாரெட் ப்ளம் (எச். 430), புதூர் (எச். 262), மோர்டன் (எச். 138), மீருட்டி (எச். 123).

* பூசா ரெட்பிளம் ரகத்தில்தான் தாக்கப்படாத பழங்களின் மகசூல் அதிகமாகக் கிடைத்தது.

* இதன் பழங்கள் சிறியனவாயும், இனிப்பாகவும், சர்க்கரைச் சத்து அதிகமாயும் இருப்பதால் 'ஜாம்' செய்வதற்கு இது மிகவும் ஏற்றது.

* புதூர், மீருட்டி ஆகியவற்றின் பழங்கள் சுமாரான அளவுடையதாயும் கவர்ச்சியுடையதாயும் நல்ல மகசூல் அளிக்க வல்லவைகளாயும் இருக்கின்றன.

* இப்புழுவின் தாக்குதலைச் சுமாராக எதிர்க்கும் தன்மையுடையனவாயும உள்ளன.

டி. டி. டீ. 0·1 சதவீதம் அல்லது என்டிரின் 0·2 சதவீதம் மருந்தை நட்ட 3–4 வாரங்களிலிருந்து தொடங்கி 15 நாட்களுக்கொரு முறையாக மூன்று முறை தெளித்தும் இப்புழுவைக் கட்டுப்படுத்தலாம்.

இப்புழுவின் தாக்குதலை எதிர்க்கும் வன்மையுடைய ரகங்களைப் பயிரிட்டு, பயிர் பாதுகாப்பு முறைகளை முறைப்படி கடைப்பிடித்து நல்ல மகசூல் பெறலாம்.

புரட்டாசி-ஐப்பசி மாத விவசாயக் குறிப்புகள்

(விவசாயச் செய்தி நிலையம்)

நெல்

சம்பா பயிரில் ஊடுழவு செய்யவும்.

நட்டு ஒரு மாதத்திற்குப்பின் 2-வது முறை 75 ராத்தல் சி. ஏ. என். உரமிடவும்.

தாளடிப் பயிருக்கு நாற்றங்கால் தயாரிக்கவும்.

விதைக்காக செஸ்பேனியா நாற்றுகளை வயல் வரப்போரம் நடவும்.

பருத்தி

கம்போடியாப் பருத்தி பாசனப் பயிரில் குழிக்கு 2 செடிகள் வைத்து நெருக்கமாக உள்ள செடிகளைக் களையவும். நட்டு ஒரு மாதத்திற்குப் பின் 100 ராத்தல் சி. ஏ. என். உரமிட்டு மண் அணைக்கவும். தத்துப் பூச்சிகள் இதர பூச்சிகளை யொழிக்க என்டிரின் (6¼ காலன் தண்ணீருக்கு 1 அவுன்ஸ் மருந்து வீதம் கலக்கவும்) மருந்தடிக்கவும்.

மானவாரி பருத்தியில் களையெடுக்கவும்.

கருங்கண்ணிப் பருத்தி விதைப்பு.—எக்கருக்கு 10–12 ராத்தல் விதை தேவை. விதைக்கு முன் 15 ராத்தலுக்கு 1 அவுன்ஸ் அக்ரசான் வீதம் கலந்து விதைக்கவும். (மருந்தையும் விதையையும் ஒரு பானையில் போட்டு குச்சியால் கலக்கவும்). விதைத்து 8–10 நாட்களுக்குப் பின் பழுதான இடங்களில் நடவு செய்யவும்.

சால்களுக்கிடையே 1½′ விடவேண்டும்.

நிலக்கடலை

மானவாரிப் பயிரில் களையெடுக்கவும், சிவப்பு கம்பளிப் பூச்சியினின்றும் பயிரை கவனமாகப் பாதுகாக்கவும்.

தென்னை

தோப்புகளில் சாம்பல் உரமிட்டு பலுகுகள் ஓட்டவும். அதிக அளவு தென்னை மட்டைகள் கிடைத்தால் அவற்றையும் உரமாகப் பயன்படுத்தலாம். எக்கருக்கு 500 முதல் 1,000 மட்டைகளை தென்னை வரிசைகளுக்கிடையே கிடங்குகள் (6′ அகலம் 1½′ ஆழம்) தோண்டி புதைக்கவும்.

தீவிர எள் சாகுபடி திட்டம்

தமிழ்நாட்டில் எள்ளு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தீவிர எள் சாகுபடி திட்டம், செங்கல்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இவ்வருடம் பிப்ரவரி மாதத்திலிருந்து அமுலிலுள்ளது. இத் திட்டம் நான்கு வருடங்களுக்கு தொடர்ந்து செயல்படும். இத்திட்டத்தின்படி அதிகப்படியாக 60,000 எக்கர்களை எள் சாகுபடியின்கீழ் கொண்டு வரவேண்டும். இதனால் 3-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் அதிகமாக 10,000 டன் எள் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயிகள் பொறுக்கு வித்துக்கள் இரசாயன உரங்கள் உபயோகிப்பதன் மூலமும் நவீன சாகுபடி முறைகளையும் சிறந்த பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கையாளுவதன் மூலமும் இந்த அதிக உற்பத்தியை அடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் சலுகைகள்.

(1) விவசாயிகள் நிலங்களில் செய்யப்படும் இரசாயன உரப்பரிசோதனை ஒவ்வொன்றுக்கும் ரூ. 25 மான்யமாக வழங்கப்படுகிறது.

(2) பூச்சி பூசண மருந்துகள் பாதி விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

(3) இரசாயன உரம் வாங்க குறுகிய காலக் கடனாக மானவாரிப் பயிர் ஒரு எக்கருக்கு ரூ. 25-ம், இறைவை பயிர் ஒரு எக்கருக்கு ரூ. 50-ம் வழங்கப்படுகிறது. 18 மாதத் தவணைகளில் இக்கடன் வசூலிக்கப்படுகிறது.

இந்த திட்டத்தை செயல்படுத்த ஒரு பிராஜக்ட் அனுவலரும் ஏழு அபிவிருத்தி உதவியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விவசாயத் துறைச் செய்திகள்.

உருளைக்கிழங்கு உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள்

(அரசாங்க ஆணை 2058, உணவு, விவசாயத் துறை, தேதி 1–7—1963.)

கடந்த வருடங்களில் உருளைக் கிழங்குப் பயிர் "இலைக் கருகல்" நோயால் பெரிதும் பாதிக்கப்பட்டு, பயிராகும் பரப்பும், கிழங்கு விளைச்சலும் வெகுவாகக் குறைந்திருக்கிறது. இக்குறையை நிவர்த்தி செய்து, முன்னிருந்த நிலைக்கே பயிரிடும் பரப்பையும், விளைச்சலையும் நீலகிரி மாவட்டம், சேலம் மாவட்டத்தில் ஹோசூர் தாலுகா, மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல் முதலிய இடங்களில் உயர்த்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசாங்கம் அங்கு உருளைக் கிழங்குப் பயிரிடும் விவசாயிகளுக்குப் பல சலுகைகள் வழங்கியுள்ளார்கள்.

சிறந்த விதைக் கிழங்கு வழங்குதல்

1. 1963–64-ம் ஆண்டு 10 டன்கள் கிரேட் ஸ்காட் உருளைக்கிழங்கு விதைக் கிழங்குகள் இறக்குமதி செய்யப்படும். ஒரு குறிப்பிட்ட ஆண்டுகள் வரை விதைக்கிழங்குகளை தொடர்ந்து இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

2. சிம்லாவிலிருந்து தருவிக்கப்பட்ட உருளைக்கிழங்கு வகைகளும் விவசாயிகள் நிலத்தில் விளைவித்து பரிசோதிக்கப்படும். 10 டன் கிழங்குகள் வரைக்கும் முழு விலையில் 10 சத சலுகையுடன் வழங்கப்படும்.

அரசாங்க தரிசு நிலங்களில் பயிரிட்டு உருளைக்கிழங்குப் பயிர் விளை நிலத்தை விஸ்தரித்தல்.

காட்டு இலாகாவிடமிருந்து சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைப்பகுதிகள், ஹோசூர் பகுதிகளிலிருந்து 200 ஏக்கர் காடுகள், உருளைக்கிழங்கு சாகுபடிக்காக விவசாய இலாகாவிடம் ஒப்படைக்கப்படும். ஆனைமலை பகுதிகளிலும் உருளைக்கிழங்கு பயிரிடமுடியுமா என்று ஆராயப்படும்.

நீர்ப்பாசன வசதிகளை அளித்தல்.

1. உதகமண்டலம், குனூர் தாலுகாக்களின் கிழக்கு பக்க கிராமங்களில் ஓடும் சிற்றோடைகளில் சிறுதடுப்பு அணைகளை ஏற்படுத்தி, தண்ணீர் இறைத்துக் கொள்ளலாம். இவ் வசதி உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான உத்திரவை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பெற்றுக்கொள்ளவும்.

மேற்குப் பகுதிகளில் ஓடும் சிற்றோடைகளிலிருந்து மேற்படி சலுகைகள் அளிக்கப்படமாட்டாது.

பயிர் பாதுகாப்பு மருந்துகள், கருவிகள், உரம் வழங்குதல்.

1. "உருளைக்கிழங்கு இலைக்கருகல் நோய்" தடுக்கும், 'ஜீனப்' (Zineb), உள்நாட்டு தாமிரம் கலந்த மருந்துகள் வழங்குதல்.

2. மருந்து தெளிக்கும் கருவிகள் 50 சத சலுகை விலையில் வழங்குதல். இச் சலுகைத் தொகை ஒரு ஸ்பிரேயருக்கு ரூ. 100-க்கு மேற்படக்கூடாது. இச்சலுகை பஞ்சாயத்து யூனியன் திட்டத்தில் வழங்கப்படும் சலுகையை விட அதிகம்.

3. காலாகாலத்தில் விவசாயிகளுக்குத் தேவையான அளவு இரசாயன உரம் கிடைப்பதற்கு வருவாய்துறை குழு (உணவு உற்பத்தி) (Board of Revenue) ஏற்பாடு செய்யும்.

கடன் வசதிகள் அளிக்கப்படும்.

1. கூட்டுறவுத் துறை மூலம் கூட்டுறவு சங்கங்கள் வழியாக தேவையான கடன் வசதிகள் குறித்த காலத்தில் வழங்கப்படும்.

2. தீவிர உரமிடும் திட்டத்தின்கீழ் உருளைக்கிழங்குப் பயிருக்கும் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திட்டப் பணியாளர்கள்

சேர்வராயன், ஹோசூர் பகுதிகளில் உருளைக்கிழங்குப் பயிரை விஸ்தரிக்க இரு விவசாய விளக்குனர்களும் விவசாய மேஸ்திரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

உருளைக்கிழங்குப் பயிரிடும் விவசாயிகள், இவ்வசதிகளை நன்கு பயன்படுத்தி இன்னும் அதிக அளவில் பயிரிட்டும் விளைச்சலைப் பெருக்கவும் உதவ வேண்டும்.

விவசாய ஆராய்ச்சி முடிவுகள்

சுடுமல்லி தாக்காத பெரிய மஞ்சள் சோளம்—கோ. 20.

சுடுமல்லி (பல்லிப்பூண்டு) சோளம் மகசூலில் 90 சதம் வரை நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை தவிர்த்து நிறைய மகசூல் தரும் புதிய ரகம் கோ. 20. ஏக்கருக்கு 315—475 கிலோ தானியமும், 2,500—3,000 கிலோ தட்டையும் கொடுக்கிறது. இந்த ரகத்தை சுடுமல்லி தாக்காது. 135—140 நாட்களில் அறுவடைக்கு வருகிறது.

இரசாயனக் களைக்கொல்லிகள் மூலம் சுடுமல்லியை நீக்குவதற்கோ அல்லது ஆட்களைக்கொண்டு அப்புறப்படுத்துவதற்கோ அதிக செலவாகும். ஆதலால் சுடுமல்லி மகசூலை பாதிக்காதிருக்க மிகவும் சிக்கனமான முறை கோ. 20 என்ற பெரிய மஞ்சள் சோளத்தைப் பயிரிடுவதே. கோவை மாவட்டத்தில் ஜூன்-ஜூலை மாதங்களில் தானியத்திற்கும் தீவனத்திற்கும் பயிரிடுவதற்கு மிகவும் ஏற்றது. பெரிய மஞ்சள் சோளம் பயிரிடப்படும் மற்ற மாவட்டங்களுக்கும் இது ஒரு சிறந்த மானாவரித் தீவனப் பயிராகும்.

கரும்பு தந்த பரிசு

(வி. பலராம ரெட்டியார், தொந்திரெட்டிபாளையம், தென்னாற்காடு மாவட்டம்.)

(இவர் 1960-61-ம் ஆண்டில் தாலூகா பரிசு பெற்றார். 1961-62-ம் ஆண்டு மாகாண கரும்பு விளைச்சல் போட்டியில் ஏக்கருக்கு 106½ டன் கரும்பு விளைவித்து மாவட்ட பரிசு பெற்றவர்.)

விழுப்புரம் தாலூகாவில் தொந்தி ரெட்டிபாளையம் ஒரு வளமுள்ள கிராமம். அக்கிராமத்தில் நான் சென்ற 15 ஆண்டுகளாக கரும்பு சாகுபடி செய்து வருகிறேன். இங்கு நஞ்சையிலும், புஞ்சையிலும் கிணற்று பாசனத்தை கொண்டு கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது.

நிலம் தயாரித்தல்.—நெல் அறுவடைக்குப் பின் நிலத்தில் பில்லிப்பசரா தழைப்பயிர் விதைத்தேன். மூன்று மாதம் கழித்து பயிரை டிராக்டர் கொண்டு மூன்று தடவை மடக்கி உழுதேன். 20 வண்டி தொழு உரம் கொட்டி பரப்பிய பின், ஆட்களை வைத்து 3½ அடிக்கு ஒன்றாக 3/4 அடி ஆழமுள்ள கிடங்குகள் வெட்டினேன். மீண்டும் கிடங்குகளுக்குள் போஸ் கலப்பையை ஓட்டி மண்ணை கிளறி விட்ட பிறகே நடவு செய்தேன்.

நடவு.—இவ்வட்டாரத்தில் சென்ற நான்கு ஆண்டுகளாக கோ. 658 என்ற புதிய ரகக் கரும்பு நடப்பட்டு வருகிறது. இது சீக்கிரம் முற்றக்கூடியது. அதிக சர்க்கரைச் சத்துள்ளது. ஆதலால் இந்த ரகத்தையே நான் பயிர் செய்தேன். நடவுக்கான விதைக்கரணைகள், கரும்பு அபிவிருத்தி அலுவலர்களின் மேற்பார்வையில் தனியாக விதைக்காக நடப்பட்ட எட்டு மாத வயதுள்ள இளங் கரும்பிலிருந்து (Nursery) வெட்டியெடுக்கப் பட்டது. கரணைகளின் இருமுனைகளையும் அரிடான் என்ற பாதரச மருந்தில் தோய்த்த பின்னரே நடவு செய்தேன். இவை கலப்பில்லாமலும் நோய் பூச்சி தாக்கப்படாமலும், நல்ல வீரியமும், தரமும் உள்ளதாக இருந்தன. ஒரு ஏக்கருக்கு 25,000 வீதம் இரண்டு பருக்கள் கொண்ட கரணைகள் 1960-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் தேதியில் நடவு செய்யப்பட்டன. மூன்று வாரம் கழித்து முளைக்காத இடங்களில், பழுது புள் நடப்பட்டது.

களையெடுத்தல்.—நட்ட 20 நாட்கள் கழித்து மண் வெட்டியால் முதல் களை எடுக்கப்பட்டது. முதல் தீனி வைத்து 20 நாள் கழித்து அதாவது நட்ட அறுபதாம் நாள் இரண்டாம் களை கொத்தி எடுக்கப்பட்டது. பயிர் சந்துகளிலிருந்த புற்கள் நீக்கப்பட்டன. இரண்டாம் உரம் வைத்து ஒரு மாதம் கழித்து, அதாவது நட்ட 110-ம் நாள் மூன்றும் களை வெட்டியால் எடுக்கப் பட்டது.

உரமிடுதல்.—கரும்புக்கு, நடவான 40-ம் நாள் முதல் உரம் வைத்தேன். நான்கு மூட்டை (400 கி.கி.) பாரி கலப்பு உரத்தை பயிரை யொட்டிவைத்து மண்ணால் லேசாக மூடப் பட்டது. வாரத்திற்கு ஒருமுறை மண் குளிர தண்ணீர் பாய்ச்சி வரப்பட்டது. முதல் தீனி வைத்த 40-ம் நாள் இரண்டாவது தடவை மூன்று மூட்டை கலப்பு உரத்தை பயிரை யொட்டி தூவி மண் தள்ளி விடப்பட்டது. இச்சமயத்தில் கரும்பு நான்கு அடி உயரம் இருந்தது. இரண்டாம் உரம் வைத்த 25 நாட்கள் கழித்து மறுபடி நான்கு மூட்டை கலப்பு உரம், சோலே கழித்தபின் கடைசி தடவையாக வைத்து, கால்மடித்து மண் அணைக்கப்பட்டது. தொடர்ந்து ஈரம் காயாமல் தண்ணீர் விட்டு வரப்பட்டது. ஒரு ஏக்கருக்கு மொத்தம் 250 ராத்தல் தழைச்சத்து கொடுக்கப்பட்டது.

விட்டம் கட்டுதல்.—கரும்பு நட்ட 90-ம் நாள் அதாவது இரண்டாவது உரம் வைத்த பின் காய்ந்த சரகை அப்புறப்படுத்தினேன். கடைசி உரம வைத்து ஒரு மாதம் கழித்து, சோலைக் கழித்து சோலையைக் கொண்டே ஒற்றை விட்டம் கட்டினேன். அடிக்கடி சோலையைக் கழித்து அப்புறப்படுத்தியதால், அசும்புகள் நீக்கப்பட்டு, நல்ல காற்றோட்டம் ஏற்பட்டு, கரும்பு நன்றாக கனத்தும், பெருத்தும் வளர்ந்தது. விட்டம் கட்டியதால் கரும்பு காற்றில் சீக்கிரத்தில் சாய்ந்து விழுந்து விடாமல் இருந்தது.

நீர்ப்பாசனம்.—கிணற்றிலிருந்து எலக்டிரிக் மோட்டார் மூலம் நீர் இறைத்துப் பாய்ச்சப்பட்டது. வாரம் ஒரு முறையாக சுமார் 55 தடவை பாய்ச்சப்பட்டது. பயிரின் தேவையை அறிந்து சீராக தண்ணீர் பாய்ச்சி வரப் பட்டதால், கரும்பு வறட்சியால் பாதிக்கப்படாமல் நன்றாக செழித்து வளர்ந்தது.

பயிர் நோய், பூச்சிகளால் பாதிக்கப்படவில்லை.

அறுவடை.—அறுவடை சமயத்தில் கரும்பு ஒன்று 13 அடி உயரமும் ஏழு ராத்தல் எடையும் இருந்தது. கரும்பில் சர்க்கரை சத்து 20 பிரிக்ஸ் (Brix) இருந்தது. 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ந் தேதிய சென்னை கரும்பு அபிவிருத்தி அலுவலர் அவர்கள் முன்னிலையில் இரண்டு செண்ட் விஸ்தீரணம் அறுவடை செய்யப்பட்டு ஏக்கருக்கு 106 டன் (545 கிலோகிராம்) கண்டு முதல் கணக்கிடப்பட்டது.

இந்த அதிக மகசூல் கிடைத்ததற்கு கீழ்க்கண்ட காரணங்களை முக்கியமாக குறிப்பிடலாம்.—

1. செம்மையான உழவு.
2. நல்ல முளைப்பு, பழுது புள்நட்டு, இடைவெளி யில்லாமல் பார்த்துக் கொண்டது.
3. தகுந்த சமயத்தில் போதுமான அளவு உரம் வைத்து, வாரந்தவறாமல் தண்ணீர் பாய்ச்சியது.
4. நேரிடை கவனம் செலுத்தி சொந்த அனுபவத்தோடு விஞ்ஞான அடிப்படையில் கரும்பு அபிவிருத்தி அலுவலர்கள் சொல்லிய முறையில் சாகுபடி செய்தது.

இப்போட்டியில் கலந்து கொண்டதிலிருந்து, முயற்சி செய்தால் நமக்குள்ள வசதிகளைக் கொண்டே சராசரி விளைச்சலை அதிகரிக்க முடியுமென்ற உண்மையைத் தெரிந்து கொண்டேன்.

தீவிர விவசாயத் திட்டத்தில் மாறுவாரி நெல்

(பெ. வெங்கடாசலத் தேவர், எம்.எல்.சி., தலைவர், பஞ்சாயத்து யூனியன், வேதாரண்யம்.)

"மண்ணை மதித்தால் உன்னை மதிக்கும்" என்பது மூத்தோர் முதுமொழி மட்டுமல்ல, கண்கூடாக யான் கண்ட உண்மையும் அதுதான். பாசன வசதியின்றி மழையை நம்பி பயிர் வளர்க்கும் ஒரு மாறுவாரி பகுதி எங்கள் வேதாரண்யம் வட்டாரம். இந்த வட்டாரத்தில்தான் எனது சொந்த கிராமமாகிய கருப்பம்புலம் உளது. எனது கிராமம் 1961–62-ல் தீவிர விவசாயத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. சாதாரணமாக எங்கள் பகுதியின் சராசரி விளைவு ஏக்கராவிற்கு சுமார் 600 ராத்தலிலிருந்து 1,000 ராத்தல் வரையில்தான் கிடைக்கும். இதைவிட இன்னும் அதிக அளவு விளைவை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆவல் என்னை இடைவிடாது ஊக்கமூட்டிக்கொண்டேயிருந்தது. அந்த ஊக்கத்திற்கு உறுதுணையாக சிறந்த முறைகளைக் கையாண்டு உற்பத்தி பெருக உழைக்க வேண்டுமென்ற உற்சாகமும் எனக்கு ஏற்



என் உயரத்தையும் மிஞ்சி நிற்கும் 101 அங்குல நெற்கற்றையை, மாவட்ட ஆட்சித் தலைவரும், பஞ்சாயத்து நிதி ஆய்வுக்குழுவிற்கு தலைவராய் எங்கள் வட்டாரத்திற்கு வருகை தந்த திரு கே. சந்தானம் அவர்களும் காணும் காட்சி.

என் மாறுவாரி வயலில் தலைநிமிர்ந்து நிற்கும் தங்க நிற நெற்கதிர்களுடன், என் வட்டார இரு விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளும் உடன் நிற்கின்றனர்.

பட்டது. அப்படி ஏற்பட்ட அந்த உற்சாகத்திற்கும், ஊக்கத்திற்கும் உழைப்பிற்கும் எதிர்பார்த்த அளவு பலன் கிட்டத்தான் செய்தது.

எனது உழைப்பிற்கு சிகரம் வைத்தாற்போல சென்ற பல ஆண்டுகளைக்காட்டிலும் விளைவை அதிகமாகவே நன்கு ஈந்தளித்தது. மாறுவாரி நிலத்தில், மழையை நம்பி பயிர் செழிக்க வேண்டிய நிலத்தில் பயிர் 101 அங்குலம் உயரம் வளர்ந்தது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். எங்கள் வட்டாரத்திற்கு திரு சந்தானம், எம்.பி., அவர்கள் தலைமையில் வருகை தந்த மத்திய அரசின் பஞ்சாயத்து நிதி ஆய்வுக் குழுவினர் அந் நெற் பயிரை பார்வையிட்டனர். அக்குழுவில் அங்கம் வகித்த மைசூர் மாநில சட்ட மன்ற உறுப்பினர் யுவராஜா திரு கோர்பாடே (சாண்டூர் ஸ்டேட்) அவர்கள் இது கரும்புதானே என்று வின

(26-ம் பக்கம் பார்க்கவும்)

1963-ம் ஆண்டு ஜூன் மாதத்திய கால நிலை அறிக்கை

[சி. பாலசுப்பிரமணியன், சீ. ரங்கநாதன், விவசாய காலநிலை ஆய்வுப் பிரிவு, கோவை.]

இம் மாதம் முதல் தினத்தில் தமிழ்நாட்டில் பருவ மழை பரவலாகப் பெய்தது. அடுத்த இரு நாட்களில் தமிழ் நாடெங்கும் பொதுவாக வறட்சி நிலவியது. 4-ந் தேதி முதல் மூன்று நாட்கள் மழை மீண்டும் பரவலாகப் பெய்தது. ஆனால் 7-ம் தேதியன்று ஆங்காங்கும், 8-ந் தேதி பரவலாகவும் மழை பெய்தது. தொடர்ந்து மூன்று நாட்கள் பொதுவாக வறட்சி நிலை நிலவியது. பின்னர் 12-ந் தேதியிலிருந்து 15-ம் தேதி வரையினும் தமிழ் நாடெங்கும் பரவலாக மழை பெய்தது. ஆனால் 13-ந் தேதியன்று இடியுடன் கூடிய பலத்த மழை ஆங்காங்கு பெய்தது. 16-ந் தேதி முதல் அடுத்த ஐந்து நாட்களில் காலநிலை வறட்சியாகவே இருந்தது. அதன் பின்னர் இம்மாதம் முடிய தமிழ் நாடெங்கும் பரவலாக மழை பெய்தது. ஆனால் 29-ந் தேதியன்று பொதுவாக வறட்சி நிலவியது. இம்மாதத்தில் எட்டு நாட்களில் பகல் வெப்ப நிலை சராசரிக்கு அதிகமாக இருந்தது. ஏனைய நாட்களில் சராசரிக்கு சரியாகவோ குறைந்தோ இருந்தது.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்

செங்கற்பட்டு மாவட்டத்தில் சுமாராக மழை இருந்தது. எனினும் வெப்பம் மிகுதியாக இருந்தது. எனவே, பாசனக் கிணறுகளிலிருந்து நெற் பயிருக்கு தண்ணீர் பாய்ச்சுதல் கடினமாயிற்று. வட ஆற்காடு மாவட்டத்தில் பெய்த மிதமான மழையினால் கரும்பு மற்றும் சோளம், சணப்பு முதலிய பயிர்கள் பயனுற்றன. இப்பகுதியில் கரும்பை மாவுப் பூச்சியும் (Cane mealy wings–Aburololus barodensis), இலைப் புள்ளி (Rust) நோயும் தாக்கின. தென்னாற்காடு மாவட்டத்தில் சுமாராக மழை இருந்தது. இம்மழை, நிலங்களை உழுது பண் படுத்த உதவிற்று. தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் மழை மிகவும் குறைவு. இங்கு நிலவிய வறட்சிநிலை பருத்தியில் காய் வெடிப் பதற்கு உதவி புரிந்தது. பருத்திப் பயிரை நாவாய் பூச்சி கள் தாக்கின. பாசன ஆறுகளில் தண்ணீர் இம்மாதம் முழுவதும் வராததால் நெல் சாகுபடி தொடங்க தாமத மாகிறது. மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் பெய்த மழை பருத்தி, மிளகாய், கரும்பு, ராகி முதலிய பயிர் களுக்கும், நெற்பயிருக்கு நிலம் தயாரிக்கவும் உதவிற்று. உசிலம்பட்டி பகுதியில் நிலக்கடலையை சிறிதளவு சுருள் பூச்சியும், பருத்தியை அசுவும் தாக்கின. கோவில்பட்டி பகுதிகளில் பருத்தியை நாவாய் பூச்சியும், இலைப்பேனும் சோளத்தை குறுத்துப் பூச்சியும் தாக்கின.

இராமநாதபுர மாவட்டத்தில் மழை மிகவும் குறைவு. எனினும் கரும்பு, ராகி கோடைப் பருத்தி முதலிய பயிர் களுக்குக்கும் பசுந்தாளுர விதைகள் விதைப்புக்கும் உதவி யாய் இருந்தது. சாத்தூர் பகுதிகளில் நெற்பயிருக்கு நிலங்கள் பண்படுத்தப்பட்டன. சேலம் மாவட்டத்தில் சங்கரி, திருச்செங்கோடு பகுதிகளில் மிதமான மழை இருந்தது. பருத்தி, கம்பு, எள் முதலிய பயிர்கள் இம் மழையால் பயனடைந்தன. கன்னியாகுமரி மாவட்டத்தில் சற்று அதிகமாகவே மழை பெய்தது. அதனால் எல்லாப் பயிர்களும் பொதுவாக பயனடைந்தன. நாகர்கோயில் பகுதியில் மரவள்ளி கிழங்கு சாகுபடிக்கு நிலங்கள் தோண்டப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் மழை போதிய அளவு இல்லை. பொதுவாக நிலவிய வறண்ட நிலை பூச்செடிகளிலிருந்து விதைகள் சேகரிப்பதற்கு உதவியது. உருளைக் கிழங்குப் பயிரை கிழங்கு அழுகல் நோய் (late blight) தாக்கியது. கோவை மாவட்டத்தில் மழை மிகவும் குறைவு. மழையின்மையால் கிணறுகளில் போதிய அளவு தண்ணீர் இல்லை. பொள்ளாச்சி பகுதியில் கடலைப் பயிர் வாட்டமுற்றன. ஆகையினால் மிகக் குறைந்த மகசூல்தான் எதிர்பார்க்கப்படுகின்றது. இப் பகுதியில் நிலக்கடலையை நாவாய் பூச்சியும், திரிப்சும் கடினமாகத் தாக்கின. கோபி பகுதிகளில் சோளம், எள் முதலியன அறுவடைக்கு வந்தன. பலத்த காற்றினால் சோளப் பயிர் தலைசாய்ந்தது. இங்கு கரும்பு, ராகி நடவும் பருத்தி யில் பறிப்பும் தற்பொழுது நடைபெறுகிறது. பருத்தியில் காய் புழுவும், ராகியில் திரிப்சும், நெற்பயிரில் நாவாய் பூச்சிகளும் வெகுவாக காணப்பட்டது. ஈரோடு பகுதியில் பெய்த மழை கம்பு, சோளம், பருத்தி, கரும்பு முதலிய பயிர்களுக்கு உகந்தது. ராகி நாற்றங்கால்களுக்கும் மற்றும் வெங்காயம், மஞ்சள் பயிர்களுக்கு இம் மழை உதவி புரிந்தது.

இம்மாதத்தில் பொதுவாக பருவமழை குறைவாக இருந்ததால் நீர்ப்பாசன திட்டங்களில் தண்ணீர் எதிர்பார்த்த அளவை விட குறைந்தது. அதனால் மின்சார உற்பத்தியும், விவசாயமும் தடைபட்டன.

குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழை யளவுகளும் வருமாறு:—

குறிப்பிடத்தக்க மழையளவு (அங்குலத்தில்).

தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
13—6—1963	குடியாத்தம்	2·03
13—6—1963	வேலூர்	2·40
24—6—1963	கன்னியாகுமரி	3·20

பிராந்திய மழையளவு (அங்குலத்தில்).

பிராந்தியத்தின் பெயர். (1)	ஜூன் மாத மழை அளவு. (2)	சராசரி யிலிருந்து மாறுபாடு. (3)	குறிப்பு. (4)
	(அங்குலத்தில்)		
வட பிராந்தியம்	2·5	—0·2	குறைவு.
கீழ்கரைப் பிராந்தியம்	3·0	+1·7	அதிகம்.
மத்தியப் பிராந்தியம்	0·9	—0·9	குறைவு.
தென் பிராந்தியம்	..	..	
மலைப் பிராந்தியம்	3·5	—2·3	மிகக்குறைவு.

1963-ம் ஆண்டு ஜூன் மாதக் காலநிலை அறிக்கை,

இடத்தின் பெயர். (1)	இம் மாத மொத்த மழை அளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	1963-ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ம் தேதிமுதல் மொத்த மழை அளவு. (4)
வட பிராந்தியம்.			
	(அங்குலத்தில்)		
சென்னை (மீனம்பாக்கம்)	1·7	—0·1	10·5
திருர்குப்பம்*	2·4	—0·4	6·2
வேலூர்	3·2	+0·5	7·2
குடியாத்தம்*	2·6	—0·9	6·7
கீழ்கரைப் பிராந்தியம்.			
பாலூர்*	1.5	—0·3	11·2
திண்டிவனம்*	1·5	—0·5	9·0
கடலூர்	0·8	—0·6	10·4
நாகப்பட்டினம்	2·0	+0·8	12·0
ஆடுதுறை*	0·3	—1·4	13·1
பட்டுக்கோட்டை*	1·1	—0·6	12·3
மத்தியப் பிராந்தியம்.			
சேலம்	2·5	+0·8	9·6
கோயம்புத்தூர்*	0·3	—1·9	5·3
கோயம்புத்தூர்	..	—1·5	3·7
திருச்சிராப்பள்ளி	0·9	—0·9	9·9
தென் பிராந்தியம்.			
மதுரை	3.7	+2·1	9·8
பாம்பன்	இல்லை	—0·2	13·8
கோயில்பட்டி*	2·5	+1·8	12·4
பாளையங்கோட்டை	0·2	—0·3	20·5
அம்பாசமுத்திரம்*	1·1	**	26·0
நாகர்கோவில்*	..	..	..
கன்னியாகுமரி*	7·6	+4·6	16·0
மலைப் பிராந்தியம்.			
கொடைக்கானல்	4·8	—0·6	24·2
கூனூர்*	2·7	—0·2	24·3
உதகமண்டலம்*	2·6	—4·0	16·1
நஞ்சநாடு*	4·0	—4·4	17·1

* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

(25-ம்பக்கம் தொடர்ச்சி)

விஞர்கள். கரும்பினது தோகையைப்போல் வளர்ந்து செழித்துள்ள இது நெற் பயிர்தான் என்று யான் கூறிய போது உண்மையிலேயே அவர் ஆச்சரியம் அடைந்து அதிசயித்தார்கள். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மன்னார்குடி மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களும் இப் பயிரை பார்வையிட்டது சிறப்பான ஒன்றாகும். ஆன்றோர்கள் பலராலும், அலுவலர்கள் பலராலும் பார்த்து ஆச்சரியப்பட்ட அந்நெல்லின் கதிர்கள் மாவட்ட வேளாண்மை அலுவலகத்திலும், வேதாரண்யம் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலும் பார்வைக்காகவும், கண்காட்சிகளுக்கு அனுப்புவதற்காகவும் வைக்கப் பட்டுள்ளது.

அதிக விளைவிற்கு, எனது ஊக்கத்திற்கு உற்ற துணையாக அமைந்தது விவசாய வளர்ச்சி அலுவலர் அவர்களின் ஆலோசனைகள். அவ் வாலோசனைகளின்படி யான் கையாண்ட முறைகளை விரிவாக வரைகின்றேன்.

(அ) பாக்டீரியா கல்சர் கலந்து கொளுஞ்சி விதைத்தேன். கொளுஞ்சி நன்றாக செழித்து வளர்ந்தது.

(ஆ) எனது பண்ணையில் உள்ள 100 மாடுகளையும், 60 ஆடுகளையும் சுமார் ஒரு மாதம் வரை கிடை நிறுத்தினேன்.

(இ) ஆற்று வண்டல் எக்கருக்கு 20 வண்டி வீதம் அடித்தேன்.

(ஈ) போஸ் கலப்பை உபயோகித்து எக்காராவிற்கு 6 உழவு போடப்பட்டது.

(உ) கடைசி உழவுக்கு முன் எக்காராவிற்கு 75 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டும், 150 ராத்தல் சூபர் பாஸ் பேட்டும், 25 ராத்தல் பொட்டாஷ் கலந்து போடப்பட்டது.

(ஊ) விதைப்பதற்கு முன் விதையில் அக்ரசான் கலந்து விதைத்தேன்.

(எ) விதைத்து 25 நாட்கள் கழித்து டி.டி.டி., பி.எச்.சி. கலந்து எக்காராவிற்கு 20 ராத்தல் வீதம் தூவினேன்.

(ஏ) களை எடுத்து ஊடு நட்டபின் மழை நன்றாக பெய்து தண்ணீர் நிற்க ஆரம்பித்தது. "வந்த பின் காப்பதை விட வருமுன் காப்பதே மேல்" என்பதற்கிணங்க பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்தேன் (பைடலான் மற்றும் பாலிடால் தெளித்தேன்).

(ஐ) பின் கலப்புக்கதிர் வெளிவருவதற்கு முன் எக்காராவிற்கு 75 ராத்தல் அமோனியம் சல்பேட் மறுபடியும் போட்டேன்.

மேற்கண்ட ஒன்பது முறைகளையும் காலந்தவறாது கடைப்பிடித்ததன் மூலமாக பயிர் நல்ல முறையிலே செழித்து வளர்ந்து 101 அங்குலம் உயரம் வளர்ந்தது. நிறைந்த நெல் மணிகளைக் கொண்டு குலைகளை நிலத்தை நோக்கி தலை வணங்கி நிற்க செய்தது. எக்காராவிற்கு 4,654 ராத்தல் நெல் விளைந்தது. எடுத்த முயற்சியும் வெற்றியுற்றது. எனவே நல்ல வாய்ப்பும், வசதியும், ஆர்வமும் உள்ள விவசாயிகள் இது போன்ற முறைகளை அனுசரித்து உழைக்க ஆரம்பிப்பார்களானால் விரைவிலே இந்த நாட்டின் உணவுப் பற்றாக்குறை நீங்கி, தன் நிறைவு பெற்ற நாடாக நமது தாய்த்திரு நாடு என்றென்றும் சுடர்விட்டு ஒளிவீசும் என்பது உண்மையிலும் உண்மையாகும்.

கால்நடை பராமரிப்பு

(நோய் ஆராய்ச்சி—ஆட்டினம்)

(டாக்டர் கே. அனந்தபத்மநாபன், ஜி.எம்.வி.சி., கால்நடை நோய் ஆய்வாளர், இராணிப்பேட்டை.)

கால்நடை நாட்டின் செல்வம். கால்நடை வளர்ப்பில் குறைந்த செலவில் அதிக பொருள் ஈட்ட முடியும். அதிலும் ஆடு வளர்ப்பு மிகவும் எளிது. ஆனாலும் இதில் சில கஷ்டங்கள் உண்டு. அவைகள் தொத்து நோயினால் பாதிக்கப்பட்டால், மிகுந்த நஷ்டம் ஏற்படு கிறது. ஆதலால் சாதாரணமாகக் காணும் நோய்களைப் பற்றியும் அவற்றைத் தடுக்கும் முறைகளையும் ஆடு வளர்ப் போர் அறிவது அவசியம்.

ஆட்டினத்தில் காணும் நோய்களில் அம்மை, அடைப் பான், துள்ளுமனு வியாதி இவைகளே மிகவும் முக்கிய மானவை.

அம்மை வியாதி.—செம்மறி ஆடுகளுக்குத்தான் அதிக மாக வருகிறது. வெள்ளாடுகளுக்கு அதிகமாக காணப் படுவதில்லை. வியாதி கண்ட ஆடுகளுக்கு உதடுகள், துடை கள், உடம்பு, முகம், மடி முதலிய இடங்களில் அம்மை முத்துக்கள் காணும். காய்ச்சல் அடிக்கும். இலேசான நொண்டுதலும் ஏற்படும். இதைத் தடுப்பதற்கு மருந்து உண்டு. அதை ஊசி முறையில் போட்டால் நன்றாக பூரிக்கும். அதை வியாதி பரவாமல் இருப்பதற்கும், வராமல் இருப்பதற்கும் அந்த மருந்தை உபயோகப் படுத்தலாம். பூரித்த ஆட்டிற்கு ஆயுள்வரை வியாதி வராது. மூன்று மாதக் குட்டிகள் முதல் இந்த தடுப்பு ஊசி போடலாம்.

அடைப்பான் வியாதி.—அடைப்பான் வியாதி கண்ட ஆடு கள் பிழைப்பது கிடையாது. இறந்த ஆடுகளுக்கு மூக் கிலும், வாயிலும் இரத்தம் வரும். சில சமயங்களில் கத்திக்கொண்டே இறக்கும். ஆகையினால் சில மாவட்டங் களில் இதை "கூப்பிட்டான்" வியாதி என்று கூறு வார்கள். இம்மாதிரி இறந்த ஆடுகளை கிராமங்களில் மேய்க்கால்களில் உறிக்கிறார்கள். இரத்தத்தில் உள்ள கிருமிகள் பூமியில் கலந்து விடுகின்றன. அவைகள் வெகு காலம் அந்த இடத்திலேயே ஜீவித்திருக்கின்றன. மறுபடியும் மழைபெய்து புல் வளரும்போது ஆடுகள் மேய்கிறது. புல்லுடன் இந்த கிருமிகளையும் சேர்த்து உட் கொண்டு விடுகிறது. மறுபடியும் இந்த வியாதி உண்டா கிறது. மேலும் "உணிகள்" இந்த வியாதியை பரவச் செய்கிறது என்று ஊகிக்கப்பட்டு வருகிறது. இந்த வியாதி யினால் இறக்கும் ஆடுகளை உரிப்பதினால் இந்த நோய் மனிதர்களுக்கும் ஏற்படலாம். இப்படி வியாதி ஏற்பட் டால் அவர்கள் இறக்கவும் நேரிடும். இதை இரத்த பரி சோதனைகள் மூலமும், இறந்துபோன ஆட்டின் தோல், மாமிசம், எலும்பு இதன் பரிசோதனை மூலம் இந்த வியா தியை அறியலாம். இந்த வியாதியை தடுப்பதற்கும், பரவா மல் இருப்பதற்கும் மருந்து உண்டு. இந்த மருந்திற்கு ஆறு மாத காலம் வரையில் தடுக்கும் சக்தி உண்டு.

துள்ளுமனு வியாதி.—கோடை காலத்திற்குப் பிறகு மழை பெய்து புல் நன்றாக வளர்ந்து வருகிறது. மேய்க் காலில் ஆடுகள் இதை அதிகமாக மேய்கிறது. ஆகையி னால் இயற்கையாக ஜீரண குழாயில் இருந்துவரும் கிளாஸ்ட் ரீடியம் என்ற கிருமிகளை சேர்ந்து (Clostridium type of organisms) விஷத்தை உண்டு பண்ணு கிறது. அப்பொழுது ஆடுகள் துள்ளி விழுந்து இறந்து விடுகின்றன. ஆகையினால் இதை துள்ளுமனு வியாதி என்று கூறுகிறார்கள். இந்த வியாதியை தடுப்பதற்காக ஆடுகளை கோடைக்கால மழைக்குப் பிறகு ஏரி சரிவுகளி லும், கால்வாய் ஓரங்களிலும், அதிகமாக புல் முளைத் திருக்கும் இதர இடங்களிலும் மேய்க்கக்கூடாது. தவிர தடுப்பு ஊசி மூலமும் தடுக்கலாம்.

நமது நாட்டில் உரோமத் தொழில் வளர்ச்சிக்காக உயர்ந்த ரக உரோமங்களை, அதாவது கம்பளியைப் பெறு வதற்காக அம்மாதிரி இனங்களை விருத்தி செய்கிறார்கள். அந்த இனங்கள் மேல்நாடுகளிலிருந்தும், இந்தியாவின் வேறு இராஜ்யங்களிலிருந்தும் கொண்டுவந்து இங்குள்ள இனத்துடன் கலந்து விருத்தி செய்ய பெரு முயற்சி செய்து வருகிறார்கள். இம்மாதிரி பிறக்கும் ஒரு சில குட்டிகளுக்கு "நிமோனியா" (Pneumonia) என்ற வியாதி உண்டாகிறது. இதைத் தடுப்பதற்கு வேண்டிய வேலைகள் முழுமூச்சுடன் செய்து வருகிறார்கள்.

மேற்கூறிய வியாதிகளைத் தவிர கழிச்சலினால் அதிக ஆடுகள் இறந்து விடுகின்றன. அப்பொழுது அருகாமை யில் உள்ள கால்நடை மருத்துவருக்காவது வட்டார அலுவலகத்திலுள்ள கால்நடை விஸ்தரிப்பு அதிகாரியிடம் தெரிவித்தால் இதை மருந்து மூலம் தடுக்க தக்க நட வடிக்கைகள் எடுப்பார்கள்.

இவைகள் அல்லாது க்ஷயரோகச் சம்பந்தமான வியாதி கள், நுரையீரல் (Lungs), கல்லீரல் (Liver), இருதயம் (Heart) முதலிய உறுப்புகள் சம்பந்தமான வியாதி களும் இருக்கின்றன. நம் தமிழ்நாடு முழுவதற்கும் இவ்விதமான வியாதிகளை ஆராய்வதற்கு வட ஆற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையில் ஆராய்ச்சி நிலையம் வேலை செய்துகொண்டு வருகிறது. அவ் வதிகாரி கிராமம் கிராமமாக சென்று ஆராய்ச்சி செய்யவும் வசதி செய்யப் பட்டிருக்கிறது. பொதுமக்கள் ஒத்துழைத்தால் ஆடுகளின் வியாதிகளை ஒழிப்பது திண்ணம்.

இம்மாதிரி வரும் வியாதிகளைத் தடுப்பதற்கு ஆடு வளர்ப்பவர்களுடைய உதவிதான் மிகவும் அவசியம். ஆடுகள் நோய்வாய்ப்பட்டு இறந்து போனால் கிராம அதி காரி மூலம் தெரிவித்தால் அதை நன்றாக ஆராய்ந்து அறிந்து வியாதியைத் தடுப்பதற்கும், பரவாமல் இருப்ப தற்கும் கால்நடை பராமரிப்புத் துறையார் உதவி புரி வார்கள்.

பஞ்சாயத்துச் செய்திகள்

தழையுரத்தில் தன்னிறைவு எய்த கீழ்ப்பாவூர் பஞ்சாயத்து யூனியனின் பெரும் முயற்சி

கீழ்ப்பாவூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த எட்டு பஞ்சாயத்துக்களில்—1. மேலப்பாவூர், 2. சிரண்டை, 3. வீர கேரளம்புதூர், 4. கழுநீர்குளம். 5. முத்து கிருஷ்ண பேரி. 6. பூலாங்குளம், 7. கண்டமங்கலம், 8. திப்பணம் பட்டி— 95 ஏக்கர்களில் பசுந்தாள் உரப்பயிர்கள் தனிப் பயிராகவே பயிரிடப்பட்டிருக்கிறது. இதில் 25 ஏக்கர்கள் சணப்பும், 70 ஏக்கர்கள் தக்கைப் பூண்டுமாகும். இதனின்று கிடைக்கும் தழை உரம் 425 ஏக்கர்களுக்கு உரமிட போதுமானதாகும். பசுந்தாள் உர உற்பத்தியின் பொருட்டு பஞ்சாயத்து யூனியன் ரூ. 4,125 மானியமாகச் செலவிட்டுள்ளது.

தழைத்து நிற்கும் சணப்புப் பயிர்

சணப்புப் பயிரில் 15 ஏகராவும் தக்கைப் பூண்டில் 25 ஏகராவும் விதைக்காக விடப்பட்டுள்ளது. இதிலிருந்து சுமார் 30 மூட்டைகள் சணப்பு விதையும் 50 மூட்டை தக்கைப்பூண்டு விதையும் கிடைக்கும். இவ் விதை கிராமத்தின் அடுத்த ஆண்டு பசுந்தாளுர விதைத் தேவையை பூர்த்தி செய்யும். மேலும் அதிகமாக கிடைக்கும் தழையை கம்போஸ்டாக்கியும் உபயோகித்து வருகிறார்கள்.

தழையுரத்தில் தன்னிறைவு எய்த இப் பஞ்சாயத்துக்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியை இதர பஞ்சாயத்துக்களும் பின்பற்றி பயனடைய வேண்டும்.

மிகச் சிறந்த உயர்தர ஜாதி நல்ல மகசூல் தரும்
உள்நாட்டு, வெளி நாட்டு
காய்கறி விதைகள்
திடமான நம்பிக்கை வாய்ந்த உண்மை ஜாதி
ஒட்டு மாஞ்செடிகள்
எலுமிச்சை, சாத்துக்குடி முதலிய
பலவிதப் பழச் செடிகள்
புஷ்ப விதை, செடிகள், பூச்சிநோய் மருந்துக்கள்
கோரையையும் அடியோடு அழிக்கும்
களை நாசினி
அதிசய வளர்ச்சி ஹார்மோன்
கிப்பரெல்லின்
(வெளிநாட்டு பாக்கிங்கில்)

கிடைக்குமிடம் :
ராஜா பண்ணைத் தோட்டம்
2, டாக்டர் சிங்காரவேலு தெரு
தியாகராயநகர் சென்னை–17

Grams : RAJSEED. — Phone : 42262.

புகையிலை விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி.

சிறந்த புகையிலை நாற்றுகளுக்கு முந்துங்கள்.

நல்ல பொறுக்கு ரக புகையிலை நாற்றுக்கள் சென்ற இரண்டு ஆண்டுகளில் இப்பண்ணையிலிருந்து பெருவாரியாக விற்பனை செய்வது போலவே இந்த வருடமும் பவானிசாகர் விவசாய ஆராய்ச்சி நிலையத்திலிருந்து செப்டம்பர் சுமார் 15-ம் தேதியிலிருந்து விற்பனையாகும். ஆயிரம் நாற்றுக்களின் விலை ரூ. 4 ஆகும். தேவையுள்ளோர் பவானிசாகர் விவசாய ஆராய்ச்சி நிலைய கண்காணிப்பாளருக்கு தேவையான நாற்றுகளின் ரகமும், எண்ணிக்கையும் குறிப்பிட்டு விரைவில் பதிவு செய்துகொள்ளவும்.

விலாசம் :

கண்காணிப்பாளர்,
விவசாய ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர் P.O.,
கோவை (ஜில்லா).

ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலயம்

செப்டம்பர் மாதத்திய கிராம நிகழ்ச்சிகள்

ஞாயிறு (1—9—63)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.

சிவப்பு பூசணி வண்டு.

கிராமம் போவோமே : செய்தி சித்திரம்.

திங்கள் (2—9—63)

ஊர்ச்சாவடி.

விஞ்ஞானகூடம் : காடுகளும் பாலைவனங்களும்.

வாகை மரம் : சித்திரம் (என். ராகவன் எழுதியது.)

செவ்வாய் (3—9—63)

ஊர்ச்சாவடி.

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்.
2. பருத்தி சாகுபடி,

புதன் (4—9—63)

ஊர்ச்சாவடி.

காலராவும் தடுப்பு முறையும்.

சரித்திரக் கதைகள் : சகாய விலைக் கடைகள் அமைத்த அரசன்.

அன்பின் விளைவு : எஸ். எம். ஏ. காதர் எழுதியது.

வியாழன் (5—9—63)

ஊர்ச்சாவடி.

திருக்குறள் விளக்கம்.

நமது திட்டம் : அலியார் அணை—செய்தி விளக்கம்.

வெள்ளி (6—9—63)

ஊர்ச்சாவடி.

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்.
2. ஜவான்கள் க்ஷேம நல குழு.

சனி (7—9—63)

ஊர்ச்சாவடி.

இனவிருத்திக்காக கோழிகளை வாங்குதல்.

நம் மாதர் மன்றம்—

1. சிறு சேமிப்பு.
2. சத்ய நெறி.

ஞாயிறு (8—9—63)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.

பசுந்தாள் உரம்.

எங்கள் தொழில்—பேட்டி.

வில்லுப்பாட்டு.

திங்கள் (9—9—63)

ஊர்ச்சாவடி.

விஞ்ஞான கூடம்.

இயற்கையின் அதிசய உணவு—பால்.

பூக்கடை : நாடகம் (எஸ். பூமிநாதன் எழுதியது).

செவ்வாய் (10—9—63)

ஊர்ச்சாவடி.

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்.
2. கன்றுக்குட்டி வளர்ப்பின் அவசியம்.

புதன் (11—9—63)

ஊர்ச்சாவடி.

அம்மை குத்தலும் அதன் உபயோகமும்.

கவி அரசனின் வரலாறு : சம்பாஷணை.

எதும் எழுத்தாம : (என். ராகவன் எழுதியது.)

வியாழன் (12—9—63)

ஊர்ச்சாவடி.

திருக்குறள் விளக்கம்.

நமது திட்டம்—ரயில் விபத்து தடுப்பு—உரையாடல் செய்தி விளக்கம்.

வெள்ளி (13—9—63)

ஊர்ச்சாவடி.

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்.
2. கிராமீய கடன்.

சனி (14—9—63)

ஊர்ச்சாவடி.

காளை மாட்டு ஈக்களை ஒழிப்பது எப்படி.

நம் மாதர் மன்றம்—

1. எங்கள் கிராமத்தில்.
2. சத்ய நெறி.

ஞாயிறு (15—9—63)

கிராம சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.

சிறந்த தேங்காய் சாகுபடி.

கிராமச் சாவடியில் வழக்கு விசாரணை.

திங்கள் (16—9—63)

ஊர்ச்சாவடி.

விஞ்ஞான கூடம் : மரத்தின் கதை.

வரப்பு வெட்டு—நாடகம்.

(என். ராகவன் எழுதியது).

செவ்வாய் (17—9—63)

ஊர்ச்சாவடி.

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்.
2. மீன் வளர்ப்புப் பற்றிய சில குறிப்புகள்,

புதன் (18—9—63)

ஊர்ச்சாவடி.

ரத்த அழுத்தம்.

சரித்திரக் கதைகள்—பாரியும் கபிலரும்.

நர்ஸ் நளினி—

(என். ராகவன் எழுதியது).

வியாழன் (19—9—63)

ஊர்ச்சாவடி.

திருக்குறள் விளக்கம்.

நமது திட்டம்—கிராமத்தில் ஆட்பலத்தை பெருக்குவது எப்படி ? செய்தி விளக்கம்.

வெள்ளி (20—9—63)

ஊர்ச்சாவடி.

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்.
2. நற்பழக்கம்—சேமிப்பு.

சனி (21—9—63)

ஊர்ச்சாவடி.

கோழிகளில் நாடாப்புழு.

நம் மாதர் மன்றம்—

1. ஆப்பக்கார அங்காயி.
2. சத்யநெறி.

ஞாயிறு (22—9—63)

கிராம சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.

கேள்வி நேரம்.

திங்கள் (23—9—63)

ஊர்ச்சாவடி.

விஞ்ஞானகூடம் : சூரியனும் அதன் சக்தியும்.

ஸ்டேண்ட் மானேஜர்.

செவ்வாய் (24—9—63)

ஊர்ச்சாவடி.

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்.
2. முப்படையில் சேர்வது.

புதன் (25—9—63)

ஊர் சாவடி.

நிமோனியா : உரையாடல்.

செய்தித்தாள் : ஊருக்கு உபகாரி.

(எஸ். பூமிநாதன் எழுதியது).

வியாழன் (26—9—63)

ஊர்ச்சாவடி.

திருக்குறள் விளக்கம்.

நமது சாதனை : உரையாடல். செய்தி விளக்கம்.

வெள்ளி (27—9—63)

ஊர்ச்சாவடி.

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்.
2. பெரியம்மை தடுப்பு.

சனி (28—9—63)

ஊர்ச்சாவடி.

முட்டைகளை கெடாமல் வைத்தல்.

நம் மாதர் மன்றம்—

1. சமையல் அறை அலங்காரம்.
2. சத்யநெறி.

ஞாயிறு (29—9—63)

விசேஷ நாடகம்.

திங்கள் (30—9—63)

ஊர்ச்சாவடி.

விஞ்ஞான கூடம் : நீராவியின் சக்தி.

வளரும் தமிழகம்.

—(0)—

விதை தின விழா

தமிழ்நாட்டில் ஆடி 18-ம் நாள் (3–8–63) அன்று ஆந்திர மகிள சபாவில் கொண்டாடப்பட்டது



திருமதி சரோஜினி வரதப்பன், தமிழ்நாடு பாரத் சேவக் சமாஜ் தலைவர்; திரு எம். ஜே. டேவிட், விவசாயச் செய்தி அலுவலர்; திருமதி ஹேமாவதி, தலைவி, ஆந்திர மகிள சபா, முதலியோர் உரையாற்று இருர்கள்.

விழாவில் பங்குகொண்ட பிரமுகர்கள், விவசாயத் துறை அலுவலர்கள் முதலியோர்.

காய்கறி விதை, நாற்றுகளை நடும் காட்சி.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1963



தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு,
விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது